# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 31.10.2023 supeedsam.com supeedsam@gmail.com


# தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம், பிக்குகளுக்கு ஒரு சட்டமா?

## தமிழ் அரசியல்வாதிகள் கேள்வி



இலங்கையில் உள்ள பிக்குகள் மற்றும் தமிழ் மக்கள் மீது இரண்டு வழிகளில் சட்டம் பயன்படுத்தப்படுவதாக தமிழ் அரசியல் பிரதிநிதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த ஒக்டோபர் 8ஆம் திகதி மட்டக்களப்பில் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவர் மீதும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

எனினும் கடந்த 7ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மட்டக்களப்புக்கான வருகை தொடர்பில் வைக்கப்பட்டிருந்த பதாகையின் மீது தாக்கிய அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தமிழ் அரசியல்

02 ஆம் பக்கத்தில்...

## 45 ஆவது நாளாகவும் தொடரும் மயிலத்தமடு - மாதவனை போராட்டம்: மலையக சிவில் அமைப்புகளும் ஆதரவு



மயிலத்தமடு, மாதவனை கவனயீர்ப்பு போராட்டம் 45ஆவது நாளாக கால்நடை பண்ணையாளர்களால் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் மயிலத்தமடு போராட்டத்தில் இணைந்து தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் மொனலார்

02 ஆம் பக்கத்தில்...



தாந்தாமலைப் பகுதியில் நாற்பதுவட்டைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட, கிழக்கிலங்கையில் மிகவும் உயரமான பாலமுருகன் சிலைக்கு ஞாயிற்றுக்கிழமை சுபமுகூர்த்த வேளையில் திருக்குடமுழுக்கு விழா இடம்பெற்றது. கிழக்கிலங்கையின் பிரசித்திபெற்ற தொன்மை வாய்ந்த முருகன் ஆலயங்களில் சிறப்பிடம் பெறும் தாந்தாமலை முருகன் ஆலயத்தை பிரதிபலிக்கு முகமாக இந்த சிலை நிர்மாணிக்கப்பட்டது.

## மஹிந்தவுக்காக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியவரை தீவிரவாதப் பட்டியலில் இருந்து நீக்கியது ஏன்?



தீவிரவாத தடைப்பட்டியலில் இருந்த இரண்டு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை அரசாங்கம் கடந்த இரு வாரங்களுக்கு முன் நீக்கியிருந்தது.

தீவிரவாத தடை பட்டியலில் இருந்து இருவரையும் பாதுகாப்பு அமைச்சே இவ்வாறு நீக்கியிருந்தது.

எமில் காந்தன், முருகேசு ஜேசுதாசன் ஆகிய இருவரே இவ்வாறு நீக்கப்பட்டனர். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கில் வாக்குகளைப் பெறுவதைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மேற்கொண்டதாகக் கூறப்படும் பணப் பரிமாற்றத்தில் எமில் காந்தன் இடைத்தரகராகச் செயல்பட்டதாக

02 ஆம் பக்கத்தில்...

## பட்ஜெட் இல் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்துள்ளதாக அறிய முடிகிறது.

தனியார் துறையினரும் இந்தத் தீர்மானத்தை பின்பற்ற முறையான திட்டங்கள்

02 ஆம் பக்கத்தில்...













## நவம்பர் 20 இல் கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி எதிர்வரும் நவம்பர் 20 மீண்டும் ஆரம்பிக்கப்படும் என சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணை எடுத்து கொள்ளப்பட்ட பின்னர்

02 ஆம் பக்கத்தில்...

# வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர் நடைபவனி







(த.குகதர்சன்)

பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் அதிபர் திருமதி.ரி.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நடைபவனியில் பாடசாலையில் மூத்த கல்வியியலாளர்கள், பாடசாலையில் கடமையாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலர் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கேக் வெட்டப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன் பாடசாலையில் கடமையாற்றி மரணமடைந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது வாழைச்சேனை இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையின் மைதானத்தில் இருந்து ஆரம்பமான நடைபவனி கல்குடா வீதி வழியாக வாழைச்சேனை பிரதான வீதி, முல்லை வீதி, விநாயகபுரம் வீதி வழியாக பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலய வீதி, பேத்தாழை மயான வீதி வழியாக பேத்தாழை கல்குடா வீதியினூடாக வருகை தந்து வாழைச்சேனை இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையை வந்தடைந்தது.

குறித்த தடைபவனியில் வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் பான்ட் மாணவர்களின் வரவேற்புடன், பாடசாலையின் கராத்தே மாணவர்கள், சுற்றாடல் பகுதி, மாணவ தலைவர்கள், சகிதம் பவனியாக கலந்து கொண்டனர்.

அத்தோடு 1996 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் வரையான மாணவர்களால் வாகனங்கள் கண்களை கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன். இசை முழங்க பழைய மாணவர்களின் வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் நடனமாடி பழைய மாணவர்கள் நடைபவனியில் கலந்து கொண்டனர்.

குறித்த நடைபவனியைப் பார்வையிடுவதற்கு பெரும்பாலான மக்கள் வீதியோரமாக குழுமி நின்றனர். அவர்கள் நடைபவனியை பார்வையிட்டு மகிழ்ந் ததுடன், கடந்த வருடமும் இதே நாளில் பாடசாலை தினத்தினை முன்னிட்டு நடைபவனி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பட்ஜெட் இல் அரச ஊழியர்களுக்கு சம்பள ...

வகுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் ஜனாதிபதியால் அமைச்சர்களுக்கு விடுக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நிதி அமைச்சர் என்ற ரீதியில் பாராளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்ற உள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## நவம்பர் 20 இல் கொக்குதொடுவாய்...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுதினம் அகழ்வு பணி ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் ராஜ் சோமதேவ அவர்கள் சமுகமளிக்க முடியாததனால் அகழ்வுப்பணிகள் பிற்போடப்பட்டதாக அவர் கூறினார்.

அதேநேரம் மிகுதியாக உள்ள செலவு தொகை பணம் வழங்குவது தொடர்பாக பேசப்பட்டு அதற்கான கணக்கறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

நேற்றைதினம் இடம்பெற்ற வழக்கின் போது சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ மற்றும் முல்லைத்தீவுமாவட்ட செயலகத்தில் இருந்து கணக்காளர் அவர்களும் பிரசன்னமாகி இருந்தனர்.

## கிரான் புலிபாந்த கல் பிரதேசத்தில் இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும்




(க.ருத்திரன்)

மட்டக்களப்பு கிரான் புலிபாந்த கல் பிரதேசத்தில் பிரதேச மக்களின் நன்மை கருதி இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.232 அவது காலால் படை பிரிகேட்டினால் இந்நிகழ்வு புலிபாந்தகல் ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவு சுகாதார வைத்தியர் அதிகாரி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிகழ்வானது கிழக்கு மாகாண பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்னவின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

நிகழ்வானது அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன் மதகுருவினால் ஆசிர்வதிக்கப்பட்டு மாணவர்களின் கலாச்சார ரீதியாக பாரம்பரிய நடனத்துடன் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பித்து வைத்தனர்.

பின்னர் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. நிகழ்வில் 23 ஆவது காலால் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன 232 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அஜித் புஸ்பகுமார பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு மற்றும் நன்கொடையாளர் ஜோர்ச் குணரட்ன அகியோர்கள் கலந்து கொண்டனர்.

## மஹிந்தவுக்காக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியவரை தீவிரவாதப் பட்டியலில் இருந்து நீக்கியது ஏன்?

கடந்தகாலத்தில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென்னிலங்கை ஊடகங்களில் எமில்காந்தன் பற்றிய தகவல்கள் வெளியாகியிருந்தன.

சமாதானப் பேச்சுவார்த்தையின் போது புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் மத்தியஸ்தராக செயற்பட்டவராக எமில்காந்தன் இருந்தார்.

எமில் காந்தன் ஏன் விடுவிக்கப்பட்டார்?

2001-2003ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது எமில் காந்தன் 'அலரிமாளிகை' க்கு அடிக்கடி வந்துச் சென்றதாகவும் கூறப்பட்டது. குறித்த காலப்பகுதியில் எமில் காந்தன் கொழும்பு ஜெய்க் ஹில்டன் ஹோட்டலில் தங்கியிருந்துள்ளார்.

எவ்வாறாயினும், 2005 ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியின் பின்னர் எமில் கந்தன் நாட்டை விட்டு வெளியேறி டுபாயில் வாழத் தொடங்கினார்.

எமில் காந்தன், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நன்கு அறிந்தவர் எனக் கூறப்படுகிறது.

எமில்காந்தனின் பெயர் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து திடீரென நீக்கப்பட்டமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது.

பயங்கரவாதத் தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ள எமில் காந்தன், வரவிருக்கும் காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் சில அரசியல் முயற்சியில் முக்கிய பங்கு வகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு அரசியலை குறிவைக்கிறாரா எமில்

எமில் காந்தனின் பெயர் பயங்கரவாத தடைப் பட்டியலில் இடம் பெற்றிருந்த போதும், வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பல நபர்களை டுபாய்க்கு வரவழைத்து அவர் பல கூட்டங்களை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது. தற்போது, வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் உள்ள அரசியல் பிரிவுகளுக்கு இடையில் நெருக்கடிகள் உருவாகியுள்ளன.

பல கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகியுள்ளன.

எமில் காந்தன், கூட்டமைப்பில் இருந்து விலகும் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துதுரையாடி பரந்தப்பட்ட கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முய்சிகளை மேற்கொள்ளக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2010ஆம் ஆண்டு எமில் காந்தனுக்கு இன்டர்போல் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், 2014ஆம் ஆண்டு அவர் தடைசெய்யப்பட்ட தீவிரவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 45 ஆவது நாளாகவும் தொடரும் மயிலத்தமடு - மாதவனை போராட்டம்;

நிறுவனத்தின் இயக்குனர் சபை ஆலோசகர் மற்றும் உறுப்பினர்கள் , மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் உட்பட பல சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

மயிலத்தமடு - மாதவனை பால் பண்ணையாளர்கள் சங்கத்தால் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியுடன் 17 நாட்கள் கடந்திருந்தன.

கால்நடைகள் மேய்ச்சலுக்கு பயன்படுத்தப்படும் நிலத்தை அரசாங்க நிதியுதவி பெற்ற நபர்கள் கையகப்படுத்தும் முயற்சியை தடுக்கப்பட வேண்டும் என்பது இவர்களது கோரிக்கையாகும். இந்த விவசாயிகள் தினசரி 3,000 லிட்டர் பாலை உள்ளூர் சந்தைக்கு வழங்கி வருகின்றனர். பால் உற்பத்தி மூலம் கிடைக்கும் வருமானத்தில் 3,000 பேரின் வாழ்வாதாரம் தங்கியுள்ளது. பால் பண்ணையாளர்களின் சில மாடுகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று 45ஆவது நாளாக கால்நடை பண்ணையாளர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**மயிலத்தமடு போராட்டத்துக்கு மலையகத்தில் இருந்தும் ஆதரவு**

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர் எஸ்.டி.கணேசலிங்கம், ச்மயிலத்தமடு பண்ணையாளர்கள் பிரச்சினை இப்போது திடீரென ஏற்பட்டதல்ல. கடந்த 6 அல்லது 7 வருடங்களாக இப்பிரச்சினை தொடர்வதுடன், தற்போது பூதாகரமாக மாறியுள்ளது. மயிலத்தமடு மேய்ச்சல் தரைகளை ஆக்கிரமித்துள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், அங்குள்ள கால்நடைகளையும் சுட்டுக் கொலை செய்து வருகிறார்கள்.

இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு அவசியம். இல்லை என்றால், இது இனவாதப் பிரச்சினையாக வெகுவிரைவில் மாறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவும் தெரிவித்தார்.

## தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம், பிக்குகளுக்கு ஒரு சட்டமா?

பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், ஜனாதிபதியை கடுமையான வார்த்தைகளால் திட்டிய மைக்கான காணொளிகளும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.

**மட்டக்களப்பு ஊடகவியலாளர்களிடம் விசாரணை**

அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்க முற்பட்டதுடன், அவர்களின் பொருட்களையும் உடைக்க முயற்சித்ததாக கூறப்படுகிறது. அது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் இந்த நாட்டில் உள்ள பிக்குகளுக்கு ஒரு சட்டமும் தமிழ் மக்களுக்கு இன்னொரு சட்டமும் பின்பற்றப்படுகிறதா? என தமிழ் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

போராட்டம் குறித்து செய்தி வெளியிட்டிருந்த ஊடகவியலாளர்களிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்

மட்டக்களப்பு ஊடகவியலாளர்களான சசி புண்ணியமூர்த்தி மற்றும் வி.கிருஷ்ணகுமாரிடம் பொலிஸார் 2 மணி நேரம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்புக்கு எதிராக தமிழ் விவசாயிகள் போராட்டம் கடந்த 8ஆம் திகதி போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதனை செய்தியாக வெளியிட்ட ஊடகவியலாளர்களிடமே பொலிஸார் இவ்வாறு வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளனர்.

செங்கலடி மகா வித்தியாலயத்தின் 149ஆவது ஆண்டு விழாவிற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 8ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தார்.

ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசியல்வாதிகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். மயிலத்தமடு - மாதவனே, மேய்ச்சல் தரைநிலங்களை வலுக்கட்டாயமாக சுவீகரித்தமைக்கு எதிராக பாற்பண்ணையாளர்கள் மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்களின் பின்புலத்திலேயே ஜனாதிபதியின் இந்த விஜயம் இடம்பெற்றது.

அங்கு போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி தாக்குதல் நடத்தி வெளியேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சுமன ரத்ன தேரரின் நடவடிக்கைகள் குறித்து சுமந்திரன் கேள்வி**

தமிழ் மக்களுக்கு எதிராக வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிடும் அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு எதிராக பொலிஸார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே சுமந்திரன் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த சில நாட்களாக சுமன ரத்ன தேரர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை குறிவைத்து வெறுப்பூட்டும் கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனை அவர் மிகவும் வெறுப்பூட்டும் வகையில் திட்டிய காணொளிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.

அத்துடன், தெற்கில் வாழும் தமிழ் மக்களை துண்டு துண்டாக வெட்டுவது ஒவ்வொரு சிங்களவரின் பொறுப்பு எனவும் சுமன ரத்ன தேரர் தெரிவித்திருந்தார்.

ICCPR சட்டம் 2007 இன் 3(1) மற்றும் (2) பிரிவின் கீழ் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது தண்டனைக்குரியது எனவும் சுமந்திரன் எம்.பி பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிழக்கிலங்கையில் உயரமான பாலமுருகன் சிலைக்கு திருக்குடமுழுக்கு விழா!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்) மட்டக்களப்பு

கிழக்கிலங்கையில் உயரமான பாலமுருகன் சிலைக்கு இன்று சுபமுகுர்த்த வேளையில் திருக்குடமுழுக்கு விழா இடம்பெற்றது.

கிழக்கிலங்கையின் பிரிசித்திபெற்ற தொன்மை வாய்ந்த முருகன் ஆலயங்களில் சிறப்பிடம் பெறும் தாந்தாமலை முருகன் ஆலயத்தை பிரதிபலிக்கு முகமிக நிர்மானிக்கப்பட்ட கிழக்கிலங்கையின் உயரமான பால முருகன் சிலை இன்று (29) திகதி காலை 10.00 மணியளவில் திருக்குடமுழுக்கு பெருவிழா இடம்பெற்றது.

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சுதானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்ற

திருக்குடமுழுக்கு பெருவிளாவில் சிவஸ்ரீ சாம்பசிவம் சிவாச்சாரியார் உள்ளிட்ட பெருமளவான பக்த அடியார்கள், சிலை நிர்மான குழுவினர் மற்றும் ஆலம் அறங்காவலர் சபையினர் என அதிகளவானோர் கலந்துகொண்டு திருக்குடமுழுக்கு பெருவிழாவினை சிறப்பித்திருந்தனர்.

இதன்போது ஆலய நிர்மான பணிக்காக கிடைக்கப்பெற்ற நிதியில் இருந்து வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் சிலருக்கு கற்றல் உபகரண தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## வயல் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் இடங்களை அடைத்துள்ள ஆற்றுவாழையினால் சம்மாந்துறை விவசாயிகள் சிரமம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள அனேகமான ஆறுகளிலும் குளங்களிலும் வாய்க்கால்களிலும் ஆற்றுவாழைகளின் அதீத பெருக்கத்தினால் வயல் நிலங்களுக்கு நீர்பாய்ச்சுவதில் பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் விஷனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது அதிகமான வயல்நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான உழும் வேலைகளும், விதைப்பு வேலைகளும் மும்முரமாக இடம்பெறுகையில் சில வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்ச முடியாத நிலமை தோன்றியுள்ளது.

ஆற்றிலிருந்து வயல் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் பகுதியில் நீர்களைகள் வளர்ந்து காணப்படுவதால் நீர்ப்பாய்ச்சும் வேகம் குறைந்துள்ளதாகவும் இதனால் விதைப்பு வேலைகள் தாமதமடைவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## கல்முனை பிரதேசத்தில் கரைவலை மீனவர்களுக்கு அதிகளவில் மீன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிரதேச கரைவலை மீனவர்களுக்கு கடந்த ஒருவார காலமாக தமது வலையில் அதிகளவில் கீரிமீன் பிடிக்கப்படுவதால் மிகவும் மகிழ்ச்சியடைவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடங்களைப் போலல்லாது இவ்வருட இறுதிப் பகுதியில் தினசரி அதிகளவில் மீன்கள் பிடிக்கப்படுவதால் தமது பொருளாதார நிலமையை சற்று சீர் செய்யக்கூடியதாக உள்ளதுடன், இம் மீன்களை கொள்வனவு செய்வதற்காக அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசத்தில் வசிக்காத மக்கள் கடற்கரைப்



பிரதேசத்திற்கு வந்து அதிகளவில் மீன்களை கொள்வனவு செய்வதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கல்முனை, சாய்ந்தமருது மற்றும் காரைதீவு பிரதேச கடற்கரையோரம் பாரிய கடலரிப்பிற்கு உள்ளாகியுள்ள போதிலும் கரைவலை மீனவர்கள் மிகவும் உட்சாகமாக தினசரி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிடிக்கப்படும் மீன்கள் கொழும்பு, கண்டி, நுவரெலியா மற்றும் குருநாகலை போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுவதுடன் மேலதிக மீன்களை கருவாடாக மாற்றும் முயற்சியிலும் பிரதேசவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## அம்பாறை மாவட்ட பெரும் போக விதைப்பு வேலைகளில் விவசாயிகள் மும்முரம்





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் 2023 -2024 ஆம் ஆண்டுக்கான பெரும் போக நெற்செய்கைக்கான விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

இம்மாவட்டத்தில் நெல்லுக்கான கிராக்கி அதிகரித்துள்ள நிலையில் விவசாயிகள் மிகுந்த உற்சாகத்துடன் வயலை உழுவதிலும் விதைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இம்முறை அம்பாறை மாட்டத்தில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவட்டத்திலுள்ள டீ.எஸ். சேனநாயக்க சமுத்திரம் மற்றும் ஏனைய நீர்தாங்கு நிலைகளின் விவசாயிகளுக்கு தேவையான நீர் காணப்படுவதுடன் மாவட்டத்திலுள்ள சகல விவசாயக் காணிகளிலும் நெற்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அக்கரைப்பற்று, ஒலுவில், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, நிந்தவூர், நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் தற்போது விவசாயிகள் விதைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.



அம்பாறை மாவட்டத்தின்பெரும் போக வேளாண்மைச் செய்கைக்காக ஏர்பூட்டும் விழா அண்மையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம தலைமையில் டீ.எஸ்.சேனநாயக்கா குளத்தருகில் ஆரம்பித்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை அம்பாறை மாவட்டம் , அட்டாளைச்சேனை ,சம்மாந்துறை, நாவிதன்வெளி, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு ,நிந்தவூர், பிரதேச செயலக பிரிவில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் இதனை தடுப்பதுக்கு நடவடிக்கை எடுக்குமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை, சாய்ந்தமருது ,காரைதீவு, நிந்தவூர், நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, அஸ்ரப் நகர் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் மீண்டும் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றது. காட்டு யானைகளின் தொல்லையால் குறித்த கிராமங்களில் மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

## சம்பள உயர்வு கோரி சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கவனயீர்ப்பு போராட்டம்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சம்பள உயர்வு கோரி ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டமொன்று சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு முன்னால் திங்கட்கிழமை (30) இடம்பெற்றது.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து 20,000 ரூபா கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிப்பைக் கோரி சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'ஆக்காதே! ஆக்காதே! கடனாளி ஆக்காதே!', 'எமது நியாயமான சம்பள உயர்வு கோரிக்கையினை ஏற்றுக்கொள்!', 'அரசே, அரச ஊழியரின் சம்பளத்தை 20,000/- ஆல் உயர்த்து!', 'வேண்டும் வேண்டும் சம்பள உயர்வு வேண்டும்' போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் சாய்ந்தமருது கிராம உத்தியோகத்தர்கள் உட்பட சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச உத்தியோகத்தர்களால் சம்பள உயர்வை வலியுறுத்தி நாடு பூராவும் போராட்டங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் விசேட சித்தி பெற்ற அசிரியர்களுக்கு கௌரவிப்பு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கல்விமாணி பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவில் விசேட சித்தி பெற்ற அசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதியும் சட்டத்தரணியுமான கி.புண்ணியமூர்த்தியின் தலைமையில் இடம்பெற்றது.

'ஆசிரியத்துள் மகிழ்வோம்' எனும் தொனிப் பொருளில் ஆசிரியர்தின நிகழ்வு களஈஉ மட்டக்களப்பு பிராந்திய நிலையத்தில் நேற்று (30) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சு.குலேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

2022ஆம் கல்வியாண்டிற்கான கல்விமாணி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDE) கற்கையில் விசேட சித்திபெற்ற 21 ஆசிரிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



# ஆர்பாட்டத்தில் கலந்துகொள்ளாத என்மீது பொய்யான வழக்கு தாக்கல் நீதிதுறை தவறான பாதைக்கு கொண்டு செல்லும் போலிசார்

## சமூக செயற்பாட்டளரான கௌரி தெரிவிப்பு

(கனகரா சரவணன்)



மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாத எனக்கு கலந்துகொண்டதாக பொய்யான ஆதாரங்களை உருவாக்கி கொண்டு எனக்கு வழக்கு தாக்கல் செய்த பொலிசார் நீதிதுறையை தவறான பாதைக்கு கொண்டு செல்லுகின்ற படுபயங்கரமான நிலையே உள்ளது எனவே பொலிசாரின் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என பாதிக்கப்பட்ட சமூகசெயற்பாட்டளரான கௌரி கோரிக்கை விடுத்துள்ளனார்.

மட்டு மாநகரசபை முன்னாள் உறுப்பினரும் சமூகசெயற்பாட்டளரான கௌரி இன்று ஞாயிற்றுக்கிழமை (29) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தாடர். கடந்த 8 ம் திகதி ஜனாதிபதி செங்கலடி பாடசாலைக்கு ஜனாதிபதி வருகையும் நடை பெற்றிருந்தது அப்போது மட்டு மேச்சல்தரை மயிலத்தமடு மாதவனை பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களின் ஆர்ப்பாட்டம் கொம்மாந்துறை பகுதியில்; நடைபெற்றது.

இதனை அடிப்படையாக கொண்டு பொலிசாரினால் ஆர்ப்பாடத்தில் ஈடுபட்ட பலரது வீடுகளுக்கு சென்று வாக்கு மூலங்களை பெற்றுவருகின்றனர் இந்த நிலையில் நான் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதாகவும் தங்களிடம் அதற்கான ஆதாரம் இருப்பதாகவும் வாக்கு மூலம் ஒன்றை பெறவேண்டும் என நேற்று சனிக்கிழமை எனது வீடு தேடி வந்த பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்தார்

அதற்கு நான் வாக்கு மூலம் தரமுடியும் ஆனால் நான் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை அன்றை தினம் நான் வீட்டில் இருந்துள்ளதற்கான ஆதாரத்தை உறுதி படுத்தியிருந்தேன் அதனை வாக்கு மூலத்தில் பதிவு செய்தால் நான் அதில் கையொப்பம் வைப்பேன் அதேவேளை நீதிமன்ற பிணை முறிபத்திரத்தில் கையெழுத்து இடமாட்டேன் என தெரிவித்தபோது அதற்கு பொலிசார் உடன் பட்டநிலையில் வாக்கு மூலத்தை அளித்து அதில் என கையொப்பம் வைத்தேன் அதேவேளை நீதிமன்ற பிணை முறிபத்திரத்தில் கையெழுத்து இடவில்லை

இவ்வாறு நான் ஆர்பாட்டத்தில் கலந்துகொள்ளாத என்னை எதற்கா பொலிசார் வாக்கு மூலம் பெறவேண்டும் எதற்காக எனது வீட்டிற்கு வரவேண்டும். இவ்வாறு பொலிசாரின் செயற்பாடு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் மட்டக்களப்பில் ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்படுத்தியுள்ளதுடன் நீதிதுறையும் பொலிசாரும் தங்களது கடமையை சரியாக செய்ய தவறியுள்ளார்கள்

எனவே ஒட்டுமொத்த நீதிதுறையும் தவறான ஒரு பாதையில் இல்லாத ஒரு விடையத்தை உருவாக்குகின்றது இதனால் நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன் எனவே இதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் ஜனதிபதி உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார்.

# சம்பள அதிகரிப்பு கோரி கவனயீர்ப்பு போராட்டம்



சம்பள அதிகரிப்பு கோரிய கவனயீர்ப்பு போராட்டமொன்று தம்பலகாமத்தில் இன்று (30) இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலக ஊழியர்கள் கலந்து கொண்டு பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். தங்களுக்கு 20ஆயிரம் ரூபா எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் வாழ்க்கை செலவு அதிகரிப்பு இதனால் வாழ்வது கஷ்டம் எனவே சம்பள அதிகரிப்புக்கோரிய போராட்டமொன்றை கவனயீர்ப்பில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

அதிகரி அதிகரி 20ஆயிரம் ரூபா அதிகரி போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். இதில் கிராம உத்தியோகத்தர்கள் ,பொருளாதார அபிவிருத்தி,முகாமைத்துவ சேவை,சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர்.

# திருக்கோவிலில் பனை விதைகள் நடும் வேலைத்திட்டம்!



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் பனை விதைகள் நடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வேலைத்திட்டமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

.இத் திட்டமானது பனை சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ள தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ள பனைசார்ந்த உற்பத்தி கிராமங்களை உருவாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதியினை பனை அபிவிருத்தி சபையினால் ரூபாய் 75000 ஒதுக்கப்பட்டிருகின்றது.

குறித்த வேலைத்திட்டத்திற்க்கா ஆரம்ப கட்ட நிகழ்வு தம்பட்டை 01 ,02 பகுதிகளின் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் க. சதிசேகரன் , பனை அபிவிருத்தி சபையின் மட்டு அம்பாறை மாவட்ட முகாமையாளர் ரி.விஜயன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தினை திருக்கோவில் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உசாந்தின் ஆலோசனைக்கு அமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சு. ரவீந்திரனால் ஒழுங்கு படுத்தி நிகழ்த்தப்பட்டுள்ளது.

# டாக்டர் ஜலீலா முஸம்மிலின் 'தூரிகை வரையும் மின்மினிகள்' ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு






(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

டாக்டர் ஜலீலா முஸம்மில் எழுதிய ‘‘தூரிகை வரையும் மின்மினிகள்’’ ஹைக்கூ கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (28) மாலை ஏறாவூர் வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

ஏறாவூர் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம்.எம். மஹ்பூழ் தலைமையில் நடைபெற்ற இந் நூல் வெளியீட்டு விழாவில், ஏறாவூர் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன் போது நூலாசிரியர் டாக்டர் ஜலீலா முஸம்மில் தனது அன்புத்தாயார் ஹாஜியானி சித்தி பௌசியா ஹயாத்துமுஹம்மதுவிடம் நூலின் முதற் பிரதியைக் கையளித்தார்.

நிகழ்வில் அல்ஹாபிழ் ஏ.எம். ஷம்லி ஹஸன் கிராத் மொழிந்ததோடு, ஏறாவூர் மட்/மம/ அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியை செல்வி என்.எம். ஆரிபா வரவேற்புரையையும் கலைஞர் எம்.ஐ. றிஸ்வி மற்றும் கவிஞர் அஸீஸ் எம். பாயிஸ் ஆகியோர் பாடல் பாடியும், ஏறாவூர் ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி கவிமணி எஸ்.ஏ. றஸாக் (கனல்கவி) நூல் பற்றிய நயந்துரையையும், மட்டக்களப்பு அஞ்சற்பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர் கே. பாத்திமா ஹஸ்னா நூல் பற்றிய ரசனையையும், ஓய்வு நிலை அதிபர் கவிஞர் எஸ்.எச். றிபாய்தீன் நூல் பற்றிய சிறப்புப் பார்வையையும், கவிதாயினி ரீஸா ஹனி நன்றியுரையும் நிகழ்த்தினர்.

கலாச்சார மத்திய நிலையத்தில் ஏற்பாட்டில் அரங்கேறிய கோலாட்ட நிகழ்ச்சி மற்றும் குட்டி கவிஞர் எஸ் .ஸைமா ஸாதியா பாடிய கவிதை, குட்டி ஆளுமை ஏ.அர்ஃபீனின் பேச்சு என்பன நிகழ்ச்சியை மேலும் மெருகூட்டின எனலாம்.

நிகழ்வில் கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில், உதவி பிரதேச செயலாளர் ஏ.சீ. அஹமட் அப்கர்,

ஏறாவூர் நகரசபை செயலாளர் எம்.எச்.எம். ஹமீம், ஓய்வு நிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நஸீரா எஸ். ஆப்தீன், சாய்ந்தமருது கமு /கமு/ மழ்ஹறுஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய அதிபர் றிப்கா அன்சார், மட்டக்களப்பு அஞ்சற்பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர் கே. பாத்திமா ஹஸ்னா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் ஏ.எல். தௌபீக் மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மாவட்ட காரியாலயம் -பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பிரதேச செயலகம்

அக்கரைப் பற்று காத்தான்குடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷேக் எஸ்.ஏ.எம்.நழீம் (நளீமி), ஏறாவூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சி.எம். றிஸ்வான் (மதனி), கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷேக் எம்.எச்.எம். நியாஸ் (நளீமி), ஏறாவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷேக் ஜவாஹிர் (பலாஹி), ஊடகவியலாளர், செய்தியாசிரியர், பல்துறைக்கலைஞர், கலைச்சுடர் எம்.எஸ்.எம். ஸாகிர், மின்னல் வெளியிட்டகப் பணிப்பாளர் நாவலாசிரியர் கவிஞர் அஸீஸ் எம். பாயிஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கொழும்பு முத்தமிழ் கலசம் இதழாசிரியர் கவிதாயினி வஃபிரா வஃபி, ஏறாவூர் ஓய்நிலைக் கோட்டக்கல்வி அதிகாரி கவிமணி எஸ். ஏ. றஸாக் (கனல் கவி) ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். நிகழ்வை அறிவிப்பாளர் எம். ஐ. இஸ்ஸத் தொகுத்து வழங்கினார்.

எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கல்விமான்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொதுமக்கள் பாவனைக்கு கையளிப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் (30) நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே,ஜே .முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய சுகாதார வைத்திய அதிகாரியின் கட்டிடத்தை கையளித்தார்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நீண்ட காலமாக நிரந்தர கட்டிட வசதிகள் இல்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் சுகாதார அமைச்சினூடாக கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத்திட்ட பகுதியில் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் உலக வங்கி நிதி உதவி திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட வேலை திட்டங்கள் 12 மில்லியன் ரூபாய் செலவில் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது இந்த கட்டிடத்தை பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டி.ஜி. மென்டலின் கொஸ்டா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், தாய்,சேய் பொறுப்பு வைத்திய அதிகாரியும் கல்முனை தெற்கு சுகாதார முன்னாள் வைத்திய அதிகாரியுமான டொக்டர் . எம்.எச்.றிஸ்வின், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர்.எம்.சி.எம்.மாஹிர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 17

# வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்

*வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்*
*வாசல் தோறும் வேதனை இருக்கும்*
*வந்த துன்பம் எது வென்றாலும்*
*வாடி நின்றால் ஓடுவதில்லை ..*

கவிஞர் கண்ணதாசன்.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான வாழ்க்கை பலருக்கு மகிழ்ச்சியாகவும், இன்னும் பலருக்கு மகிழ்ச்சியும் துன்பமும் கலந்ததாகவும், இன்னும் பலருக்கு துன்பம் துயரம் நிறைந்ததாகவும் அமைந்து விடுகின்றன. இதயே 'அவரவர் விதிப்படிதான் வாழ்க்கை' என்றும் கூறுவார்கள். 'விதிக்கப்பட்டது எதுவோ அதன்படியே வாழ்க்கை அமையும்' எனவும் கூறுகின்றனர். இரவும் பகலும் வருவது போல் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் சேர்ந்தே வரும். இது உலக நியதியாகும். வாழ்வில் துன்பப்படாதவர் வாழ்க்கையின் சூட்சுமத்தைப் புரிந்த கொள்ள மாட்டார். துன்பம், துயரங்கள், வலிகள், வேதனைகள் ஆகியவற்றை எதிர்கொண்டு வாழப் பழகிக் கொண்டவருக்கு வாழ்க்கையில் எத்தகைய துன்பம் வந்து நேர்ந்தாலும் அதனை வெற்றிகரமாகச் சமாளித்து வாழப் பழகிக் கொள்வார். துன்பம், துயரை அனுபவிக்காதவர் வாழ்க்கையின் உண்மைத்துவத்தை விளங்கிக் கொள்ளமாட்டார். இத்தகையவர்களே பண்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்களே வாழ்க்கையைத் திட்டமிட்டு வழி நடாத்துவார்கள்.

பிள்ளைகளின் கல்வியும் வாழ்க்கையும். நமது வாழ்க்கை பல முறைமைகளுக்குள் கட்டுண்டு இருக்கிறது. குடும்பம், சமூகம், நாடு, குலம், கோத்திரம், சாதி, சமய, மரபுகள், சம்பிரதாயம், பழக்கவழக்கம், ஒழுக்க நெறிமுறைகள், இனம், மொழி, சட்டங்கள், விதிகள், கோட்பாடுகள் எனப் பல விடயங்கள் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை பிள்ளை ஒன்று கருக் கொண்டது முதல் பிறந்து வாழ்ந்து இறக்கும்வரை இத்தகைய கட்டமைப்புக்குள் இணைந்து, கடைப்பிடித்து வாழ வேண்டியது அவசியமாகின்றது. பிள்ளை பிறந்து ஐந்து வயது வரை குடும்பத்தோடு இணைந்து வாழ்கிறது. 70 வீதத்துக்கு மேற்பட்ட நாடுகளில் பிள்ளைகளின் முறையான கல்விச் செயற்பாடுகள் ஐந்து அல்லது ஆறு வயதின் பின்னரே ஆரம்பமாகின்றன. இலங்கையில் பிள்ளைகளின் உடல், உள, சிந்தனை வளர்ச்சி பற்றியும் அவர்களின் நடத்தைக் கோலங்கள் பற்றியும் சிந்திக்காத பெற்றோர் எலோகுசன், பிரத்தியேக வகுப்புக்கள், முன்பள்ளிகள் எனக் 'குருவியின் தலையில் பனம் பழத்தை சுமத்துவது' போல் தாய் தந்தையர், பிள்ளைகளுடன் விளையாட வேண்டியதை விடுத்து பிள்ளைகளுக்குச் சுமைகளை சுமத்தி விடுகின்றனர்.

முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகளிடம் நமது எண்ணங்கள், எதிர்பார்ப்புக்களைத் திணிப்பதை விடுத்து அவர்களின் வயது, நடத்தை இயல்புகளுக்கேற்ப இயங்கவிட வேண்டும். அதைவிடுத்து அவர்களின் நடத்தைக் கோலங்களை மாற்றி அமைப்பதனால் பல பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடுகின்றன. இந்தப் போக்கு அவர்களின் பாடசாலை வாழ்க்கை முடியும்வரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பல பாடசாலைகளின் கட்டமைப்புப் பலவீனமாகிக் கொண்டு இருப்பதனால் மூலை முடுக்கெல்லாம் பிரத்தியேகக் கற்கை நிலையங்கள் பல்கிப் பெருகி விட்டன. அவை பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதையும்விட பெற்றோரின் எதிர்பார்ப்புக்ளை நிறைவு செய்து கொண்டிருக்கின்றன. பல அரசியல் வாதிகளுக்குத் தேர்தல் காலத்தில் வாக்குப் பலத்தை அதிகரிப்பதற்கு பிரத்தியேக வகுப்புக்களும், அதன் நடத்துனர்களும் ஆசிரியர்களும் தேவைப்படுவதனால் அதனை ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றனர். அரசியல்வாதிகள் தமது தேவைக்காகப் பல நிலையங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஒழுங்குமுறையற்ற, கட்டுப்பாடுகள் குறைந்த பல பிரத்தியேக வகுப்புக்களால் பல சமூகப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. அத்தோடு பெற்றோருக்குப் பாரிய பொருளாதாரச் சுமையினையும், வாழ்க்கைச் செலவினையும் அதிகரித்து விட்டிருக்கின்றன. பெரும்பாலான பெற்றோரும் பிள்ளைகளும் பாடசாலைகளில் நம்பிக்கை இழந்து பிள்ளைகள் சித்தியடைவதற்குப் பிரத்தியேக வகுப்புக்களை நாடுகின்றனர். பிரத்தியேகக் கற்கை நிலையங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் பாடசாலைக் கட்டமைப்பையும் விட பெருமளவு செல்வாக்கினை ஏற்படுத்தி விடுகின்றன.

### கைப்பேசிப் பாவனையும் கட்டமைப்புக் குலைவும்

பிரத்தியேக வகுப்புகள் பெரும்பாலும் கட்டுப்பாடுகள் குறைந்தவை. பணத்தை நம்பிய செயற்பாடாக இருப்பதனால் ஒழுக்கம், கட்டுப்பாடுகள் பேணப்படுவது மிக மிகக் குறைவாகவே உள்ளன. அதனால் கட்டிளமைப் பருவத்தினர் பலரின் ஒழுக்கம் பாதிக்கப்பட்டுக் கொண்டு செல்கின்றன. பிரத்தியேக வகுப்பக்களில் பல சமவயதுக் குழுவினரின் சேர்க்கையை அதிகரிப்பதோடு, அவர்களுக்குரிய அங்கீகாரமும் கிடைக்கின்றன. இன்றைய தகவல் தொழினுட்ப யுகத்தில் சமூக வலைத்தளங்களின் அதிகரிப்பும் திறன்பேசிகளின் எல்லை மீறிய பாவனையும் பல இளைஞர், யுவதிகளின் வாழ்க்கை திசைமாறிப் போவதற்கும் காரணமாக அமைகின்றன. அவை இளையோரின் வாழ்க்கையை மாத்திரமின்றி பெரியோரையும் பாதித்துக் கொண்டிருக்கின்றன. அருகில் என்ன நடக்கிறது என்பது தெரியாமலே பலர் திறன்பேசிகளில் மூழ்கிப் போய் இருக்கின்றனர். வீட்டுக்குள்ளே சிறியோர் தொடக்கம் பெரியோர் வரை ஒவ்வொரு கைப்பேசியுடன் ஒதுங்கிவிடுகின்றனர். அதனால் குடும்பங்களில் காலாகாலமாகப் பேணப்பட்டு வந்த குடும்பக் கட்டடைப்பு சிதைந்து கொண்டிருக்கின்றன. அன்பு, கருணை, பாசம், நேசம், புரிந்துணர்வு, ஒற்றுமை ஆகியன குறைந்து செல்கின்றன. அதனால் குடும்பங்களில் நாளாந்தம் பிரச்சினைகளும் அதிகரித்துச் செல்கின்றன. பல குடும்பங்கள் பிரிவதற்குக் காத்துக் கொண்டிருக்



கின்றன.

பல குடும்பங்களில் திறன்பேசிகளுக்கு மீள் நிரப்புவது தொடர்பாகப் பல பிரச்சினைகள் தோன்றிக் கைப்பேசி தொடக்கம், பொருட்கள் வரை சேதமாக்கப்படுகின்றன. பல குடும்பங்களில் பிள்ளைகள் பெற்றாரைத் துன்புறுத்தி, அடிதடியிலும் இறங்கி விடுகின்றனர். மதிப்பு, மரியாதை இல்லாமல் சுடு சொற்களைப் பேசிவிடுகின்றனர். அதனால் பல பெற்றோர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மீள் நிரப்புவதற்குப் பணம் கொடுக்கமையினால் தற்கொலை செய்த சம்பவங்களும் பதிவாகி இருக்கின்றன. திறன்பேசிகளுக்கூடான சமூகச் சீரழிவுகள் நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன. மெய்நிகர்(Zoom) தொழினுட்பத்தின் ஊடான வகுப்புகள் கொரோனா அவசர நிலையின் பின்னர் ஆரம்பமாகி இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன. இத்தொழினுட்பம் வெளிநாடுகளுக்கும் சில அரச கருமச் செயற்பாடுகளுக்கும் தற்போதைக்குப் பொருத்தமானதாக இருக்கின்றன. இலங்கை போன்ற நாடுகளில் மாணவரின் கற்றல் செயற்பாடுகளுக்கு இப்போதைக்கு எந்தளவு பொருத்தமானது என்பது சிந்திக்கப்பட வேண்டியது. பல குடும்பங்களில் உள்ள மாணவர்களால் திறன்பேசியினைக் கொள்வனவு செய்ய முடியாமலும், மீள் நிரப்புவதற்குப் பணம் இல்லாமலும் இருக்கும் நிலையில் இதுவும் தேவைதானா எனப் பலரும் கூறுவதையும் கேட்க முடிகின்றது. மெய்நிகர் வகுப்ப நடத்துவோருக்கு மாதம் முடிய வங்கியில் நிலுவை அதிகரிக்கிறது. மாணவர்களின் கண்பார்வை காலப்போக்கில் (Closure Angle Glaucoma) பாதிக்கப்பட்டுச் சீர்செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பல பிள்ளைகள் மெய்நிகர் வகுப்பெனக் கூறிக் கொண்டு அறையைப் பூட்டிய நிலையில் சமூக வலைத்தளங்களில் வேறு ஏதோவெல்லாம் பார்ப்பதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. இன்னும் பல பிள்ளைகள் மெய்நிகர் கற்றலைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது தூங்கி விடுவதாகப் பல பெற்றோர் குறை கூறுகின்றனர். சில பிள்ளைகள் செயலியைத் திறந்து வைத்துக் கொண்டு வேறு செயலில் ஈடுபடுவதாகவும் பல தகவல்கள் கூறுகின்றன.

இலங்கையில் ஆசிரியர் வகுப்பறையின் முன் நின்றுகொண்டு வினாக் கேட்டுக் கற்பித்தலையே மாணவர்கள் விரும்புகின்றனர். எத்தகைய மாணவராக இருந்தாலும் 30 நிமிடங்களுக்கு மேல் திறன்பேசியைத் தொடர்ந்து பார்ப்பாராயின் கண் களைப்படைந்து சோர்ந்து விடுவார்கள். அதனாலேயே பலரும் மெய்நிகர் வகுப்புக்களை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றனர்.

### பிரச்சினையின் தன்மையும் கட்டமைப்பும் வேறுபட்டவை.

50 வருடங்களுக்கு முன்பிருந்தவர்கள் எதிர் கொண்ட பிரச்சினைகளின் வகை, தன்மை, அதன் பிரதிபலிப்பு, விபரீதம் என்பன வேறுபட்டது. 30 வருடங்களுக்கு முன் பிரச்சினை அதுவாக இருந்தாவும் தன்மையும் தீர்வும் வேறுபட்டதாக இருந்தன. 20 வருடம், 10 வருடம், தற்போது எனப்பார்த்தால் அவற்றின் வகை, தன்மை, பிரதிபலிப்பு என்பன வேறுபட்டும், பல விபரீதங்களுக்குக் காரணமாகி இருப்பதையும் காண்கிறோம். இன்றைய பிரச்சினைகளில் பல திறன்பேசி, சமூக வலைத்தளங்கள், போதைப் பொருள் பாவனை, குடும்பப் பிரச்சினைகள், அதிகரித்த வாழ்க்கைச் செலவு, கட்டுக்கடங்காத ஆடம்பரச் செலவு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வின்மை, ஆசை, கோபம் ஆகியவற்றின் காரணமாக ஏற்படுகின்றன. முன்பு பிரச்சினைகள், பிணக்குகள் வரும்போது மூத்தவர், பெரியவர், ஊர்ப்



சின்னத்தம்பி குருபரன்

பெரியவர் வந்து தீர்த்து வைப்பார். இன்று பெரியோர், மூத்தோருக்குக் கொடுக்கும் கௌரவம், மரியாதை குறைந்து செல்வதைக் காண முடிகின்றது. அதனால் தமக்கேன், வம்பு, வழக்கு என அவர்களும் விலகி இருக்கின்றனர்.

வாழ்க்கையில் பிரச்சினைகளைச் சந்திக்காதவர் எவரும் தமது வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொண்டு சிறப்பாக வாழ முடியாது. பிரச்சினை இல்லாமல் எவரும் இருக்கவும் முடியாது. நாம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளே நம்மைச் சுதாகரித்துக் கொண்டு முழு மனிதனாக வாழ வைக்கிறது. பிரச்சினை எதுவாக இருந்தாலும் சோர்ந்த போகாமல் உத்வேகத்தடன் பிரச்சினைக்கான தீர்வினை இனங்கண்டு விடாமுயற்சி, நம்பிக்கையோடு செயலில் இறங்கி வெற்றியடைபவரே எதையும் சாதிக்கும் திறன் பெற்றவராக இருப்பார். தற்காலத்தில் பிரச்சினைகள் பல்வேறு வகைகளில், ரூபங்களில் உருவாகின்றன. 'பிரச்சினையைப் பிரச்சினையாக எடுத்தக் கொண்டால் பிரச்சினைதான். பிரச்சினையை நமது முன்னேற்றத்தக்கான ஒரு மூலமாகக் கருதிக் கொண்டால் எல்லாமே சாத்தியமாகும். வாழ்க்கை என்றால் ஆயிரம் இலருக்கும், வாசல் தோறும் வேதனை இருக்கும். அதனைப் புரிந்த கொண்டு சாதித்துக் காட்டுபவரே எத்தகைய சூழ்நிலையிலும் எதையும் சமாளித்து வெற்றி கொள்பவராக இருப்பார். அவரே சாதனையாளரும் ஆகின்றார்.

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளில் பல உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், சச்சரவுகள் காரணமாகப் பதிவு செய்யப்பட்டவையே. கொடுக்கல் வாங்கல், காணித் தகராறு, உரிமைப் பிரச்சினை, சொத்துப் பங்கீடு தொடர்பான பிரச்சினைகள் எனப் பேசித் தீர்க்கப்பட வேண்டியவைகள் நீதி மன்றங்களுக்குச் சென்றிருக்கின்றன. மனித உறவுகள் சீர்குலைந்து போய்க் கொண்டிருக்கின்றன. குடும்ப உறவுகள் பல இடங்களில் கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கின்றன. தேவையற்றதுக்கெல்லாம் நேரத்தைச் செலவிட்டுத் தேவையானதைச் செய்ய மறந்துவிடுகின்றனர். எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு உண்டு. தீர்வில்லாமல் எந்தப் பிரச்சினையும் இல்லை. சில பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்காமல் இழுத்தடிப்பார்கள். சில பிரச்சினைகளுக்குத் தீர்வினை முன்வைக்காமல் கிடப்பில் போட்டுவிடுவார்கள். இன்னும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வினை முன்வைத்தால் புதிய, புதிய பிரச்சினைகள் உருவாகும் என்பதற்காக ஒன்றும் செய்யாது விட்டுவிடுவார்கள். அவற்றுள் சிலவற்றுக்குத் தீர்வினை முன்வைக்காததனால் விஸ்வரூபமெடுத்து பல விபரீதங்களை ஏற்படுத்தியதை இருந்ததையும் கண்டிருக்கிறோம்.

நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் பல கட்டமைக்கப்படாததாக இருக்கலாம். அவற்றை இனங்கண்டு கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது வெற்றியும் தோல்வியும் இன்பமும் துன்பமும் கலந்தது. சகலதையும் கடந்த செல்லப் பழகிக் கொள்ள வேண்டும். எதையும் அளவோடு வைத்துக் கொள்வது சிறந்தது. பேராசை பெரு நட்டத்தை ஏற்படுத்திவிடும். 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்பார்கள். எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும். பிள்ளைகள் மீது அளவுகடந்த பாசம் வைத்திருந்தவர்களில் பலர் சோர்ந்த போய் இருக்கின்றனர். 'உறவுக்குப் பகை கடன்' கடன் கொடுப்பதிலும் கடன் வாங்குவதிலும் கவனமாக இருத்தல் வேண்டும். நமது சுயமரியாதை, சுயகௌரவம், தன்மதிப்பு ஆகியன நம்மை விட்டுச் செல்வதற்கு அதுவே காரணமாக அமைந்து விடுகின்றன. எதை இழந்தாலும் சுயகௌரவத்தையும், சுயமரியாதையையும் எங்கும் எவ்விடத்திலும் இழந்துவிடக் கூடாது. எல்லாமே வந்து போகும். சுயமரியாதையையும் சுயகௌரவத்தையும் இழந்தால் மீளப் பெறமுடியாது. வெற்றி வரும்போதும் தோல்வி வரும் போதும் எதையும் தாங்கும் இதயம் வேண்டும். நெஞ்சில் துணிவும் முயற்சியும், நம்பிக்கையும் இருந்தால் எதனையும் சாதிக்கலாம். எதனையும் விரும்பியவாறு கட்டமைத்துக் கொள்ளலாம்.

### வாழ நினைத்தால் வாழலாம்

வாழ்வில் இன்பமோ துன்பமோ எது நேர்ந்தாலும் அந்த வாழ்க்கையையும் நாமே வாழ வேண்டும். பிறந்தோம் வளர்ந்தோம் இறந்தோம் என்றில்லாமல் நமக்குரிய வாழ்க்கையை நாமே கட்டமைத்துக் கொள்ள வேண்டும். எது நடந்தாலும் எதைப் பற்றியும் கவலை கொண்டு சோர்ந்து போகாது வருவது வரட்டும் எனக் கொண்டு வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே எனக் கொண்டு நமது வாழ்க்கையைத் திட்டமிட்டுச் சீரமைத்துக் கொண்டால் 'எதையும் தாங்கும் இதயம்' நம்மிடம் சேர்ந்து விடும். இந்த நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் புதிய புதிய சவால்கள், பிரச்சினைகள், அச்சுறுத்தல்கள், எதிர்ப்புக்கள் ஆகியவற்றை எதிர்கொண்டு அதற்கேற்றால் போல் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொண்டு வாழ வேண்டிய கட்டாயத்துக்குள் இருக்கிறோம். வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலைகளையும் புரிந்து கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும். 'தூற்றுவார் தூற்றட்டும் புழுதிவாரிப் போற்றுவார் போற்றட்டும் தொடர்ந்த செல்வேன் என இலட்சியத்தின் எல்லை நோக்கி' என்ற வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் கொண்டு நாம் நிர்ணயித்த புதிய வாழ்க்கைக்குத் தயாராக வேண்டும்.

நமக்குரிய எந்தக் காரியத்தையும் தொடங்குவதும் வெற்றிகரமாக முடித்து வைப்பதும் நாமாகவே இருத்தல் வேண்டும். செயலைத் தொடங்கும்போது நம்முடன் கூட இருந்த பலர் முடிக்கும்போது இருக்கமாட்டார்கள். அதனைப் புரிந்த கொண்டு செயற்பட வேண்டும். பிரச்சினை தொடர்பாக எத்தனை பேருடன் ஆலோசனை பெற்றாலும் இறுதித் தீர்மானம் எடுப்பது நாமாகவே இருத்தல் வேண்டும். கோபம், கர்வம், நான் என்ற அகங்காரம், மற்றவரின் வெற்றியைப் பறித்தெடுத்து வெற்றியடைய வேண்டும் என நினைப்பவர்கள் நிரந்தரமான வெற்றியை அடைய முடியாது. நமக்குக் கீழ் பணியாற்றுபவர்களையும் அரவணைத்து, அவர்களிடத்தில் நம்பிக்கை உருவாக்கத்தை ஏற்படுத்தி அவர்களோடு சேர்ந்து வெற்றியை நமதாக்கிக் கொள்ள வேண்டும். வெற்றிகளையும் மீள்பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். தோல்விகளுக்கு நாமே காரணமாக இருந்துவிட்டு தோல்வியை மற்றவர்மீது சுமத்தக்கூடாது. ஒரு சாதனையாளன் தொழிலையும் குடும்பத்தையும் சமமாக நேசித்தல் வேண்டும். குடும்பத்துக்காகவும் நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். குடும்பத்துடன் சந்தோசமாக இருந்தவர்களே வாழ்க்கையில் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். அச்சாதனைகளைப் புரிந்த சந்தோசமாக வாழ்வதற்கு நமது வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள வேண்டும். அதுவே நமக்குரிய கட்டைமைக்கப்பட்ட வாழ்க்கையாகவும் அமைந்து விடும்.

*மனம் போன போக்கிலே கால்கள் போகலாமா?*
*கால்கள் போன போக்கிலே மனம் போகலாமா?*
*மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?*
*மனிதன் போன பாதையை மறந்து போகலாமா*

**மனிதன் போன பாதை தொடரும்..**



# பாலஸ்தீன போரில் பணயக் கைதிகள் விவகாரம் :

# கட்டாரின் இராஜதந்திரம் வெற்றியளிக்குமா? இஸ்ரேல் பணயக் கைதிகள் விடுதலையாவரா?

கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் மேலும் பணயக்கைதிகளை விடுவித்து, முழுமையான போரைத் தடுக்க முடியுமா என்பதனை இனிவரும் நாட்களிலே தான் பார்க்க முடியும்.

ஹமாஸால் பணயக் கைதிகளாக இருந்த அமெரிக்கத் தாய் மற்றும் மகளின் திடீர் விடுதலைக்கு கட்டார் அரசு முக்கிய பங்கு வகித்தது. இப்போது ஹமாஸ் வசமுள்ள சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பது, முழு அளவிலான போரைத் தடுக்கும் நோக்கில், கட்டார் அரசு பரந்த உரையாடல் அல்லது மத்தியஸ்தத்திற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

இரண்டு பணயக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவிப்பது நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக இருக்கும் என்று பேச்சுவார்த்தையாளர்கள் ஹமாஸை சமாதானப்படுத்த முடிந்தது.

ஹமாஸ் உடனான வெற்றிகரமான பணயக்கைதிகள் பேச்சுவார்த்தை கட்டாரை இந்த நெருக்கடியில் இராஜதந்திரத்தின் மையமாக காட்ட அனுமதித்தது என்று பிரிட்டிஷ் சிந்தனைக் குழுவான லண்டன் குளோபல் ஸ்ட்ரேடஜி இன்ஸ்டிட்யூட்டின் கூறியுள்ளது.

எண்ணெய் வளம் கொண்ட பாரசீக வளைகுடாவில் உள்ள கட்டார் அரசின் தொடர் இராஜதந்திர முயற்சிகளில் இது சமீபத்திய வெற்றியாகும். கட்டார் அரசால் சமீபத்தில் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் நிகழ்ந்தது. மற்றும் ரஷ்யாவிலிருந்து நான்கு உக்ரேனிய குழந்தைகளை விடுவிப்பதற்கு பேச்சுவார்த்தைக்கு உதவியது.

2021 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதற்கு முன்பு தலிபான்களுடன் சமாதானப் பேச்சுக்களையும் நடத்தியது. ஆனால் ஹமாஸின் அரசியல் தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த கட்டாரின் செயலால், இஸ்ரேலுக்கு தன்னை ஒரு மத்தியஸ்தராக முன்வைக்கும் முயற்சியை சிக்கலாக்கி உள்ளது.

## ஹமாஸ் பிடித்த பணயக் கைதிகள்:

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல் நீடித்து வரும் நிலையில், ஹமாஸ் குழு, பணயக் கைதிகள் அனைவரையும் நிபந்தனையுடன் விடுவிக்க முன்வந்தது. காஸா மீதான வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தினால், அனைத்து பொதுமக்களையும் பணயக்கைதிகளை உடனடியாக விடுவிக்க தயாராக இருப்பதாக ஹமாஸின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக மீஆஇ நிறுவனம் செய்தி வெளியிட்டது.

இஸ்ரேலியப் படைகள் காஸா பகுதியில் இராணுவத் தாக்குதலை நிறுத்தினால், ஒரு மணி நேரத்திற்குள் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்க ஹமாஸ் அதிகாரி தயாராக இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் காஸா நகர மருத்துவமனை மீது இஸ்ரேலின் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டதில் சுமார் 500 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன. எனினும் மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு இஸ்ரேலின் இராணுவம் பொறுப்பேற்க மறுத்துவிட்டது. இதன் பின் பாலஸ்தீன மக்கள் வசிக்கும் பகுதிகளில் முன்னறிவிப்பின்றி நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலின் போதும் ஒரு இஸ்ரேலிய பணயக்கைதி கொல்லப்படுவார் என ஹமாஸ் தற்போது அறிவித்துள்ளது.

பாலஸ்தீன மக்கள் மீது தாக்குதல் நடத்தினால் ஒவ்வொரு பணயக் கைதிகளாக உயிரிழப்பார்கள் என ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேல் மீதான சமீபத்திய தாக்குதலுக்குப் பின்னர் ஹமாஸ் அமைப்பால் பல இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து சென்றுள்ளனர். இவ்வாறு பணய கைதிகளாக கொண்டு செல்லப்பட்ட மக்கள் கொல்லப்படுவார்கள் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பணயக்கைதிகள், உலகின் மிக அதிக மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒன்றான காசா பகுதியில் உள்ள ஹமாஸ் மறைவிடங்களில் வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.



இதேவேளை, ஹமாஸுக்கு எதிராகப் போரிடுவதற்காக இஸ்ரேல் இராணுவத்திலிருந்து வெளியேறிய சுமார் 300,000 பேர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## யோம் கிப்பூர் போருக்குப் பின் இழப்பு:

யோம் கிப்பூர் போருக்குப் பிறகு இஸ்ரேலில் நடந்த வன்முறையிலேயே, பல பணயக் கைதிகள் எல்லையைத் தாண்டி காசாவிற்குள் கொண்டு செல்லப்பட்டனர். ஹமாஸின் தரை, வான் மற்றும் கடல்வழி தாக்குதல்களில் பொதுமக்கள், ராணுவத்தினர் என குறைந்தது 1500 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியுள்ளது. 2,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஏவப்பட்ட 7,000 ராக்கெட்டுகளுடன் கூடுதலாக 5,000க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் இஸ்ரேலிய எல்லைக்குள் ஏவப்பட்டதாக இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது

இஸ்ரேலும் அமெரிக்காவும் பணயக்கைதிகளை விடுவிக்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதாக சபதம் செய்துள்ளன. தற்போது காசா பகுதியில் ஹமாஸுக்கு எதிரான தரை வழி தாக்குதலை ஆரம்பிக்கும் என்று இஸ்ரேல் அறிவித்ததை அடுத்து, ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் புகலிடம் தேடி தெற்கு காசாவிற்கு தப்பிச் சென்றுள்ளனர்.





## ஜெர்மனி முயுனிச் ஒலிம்பிக்ஸ் பணய விவகாரம்:

பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் இஸ்ரேலின் மீது நீண்ட காலமாக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. குண்டு வைப்பது, ராக்கெட்டை ஏவி தாக்குவது என அனைத்தையும் கையாண்டன. இஸ்ரேல் எதற்கும் சளைக்கவில்லை. பாலஸ்தீன தீவிரவாத தாக்குதல்களை திறம்பட எதிர்கொண்டது. உலகிலேயே சிறந்த உளவுப் படை எதுவென்றால் அது இஸ்ரேல் நாட்டின் மொசாட் என நீண்ட காலமாக விளங்கியது.

பாலஸ்தீன அமைப்புகளால் வெளி நாடுகளிலும் இஸ்ரேலியர்களின் மீது தாக்குதல் நடத்தாப்பட்டது.

1972 ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் முயுனிச் (Munich) நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை Black September என்ற பாலஸ்தீனிய இயக்கதைச் சேர்ந்தவர்கள் பணயமாக பிடித்து பின்னர் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய உளவு நிறுவனம் ஒலிம்பிக் வீரர்களைக் கொன்ற 11 பாலஸ்தீன தீவிரவாதிகளை உலகம் முழுவதும் சுமார் 20 ஆண்டுகள் தேடி வேட்டையாடிக் கொன்றது. முயுனிச் சம்பவத்தையும் அதன் தொடர்ச்சியாக தீவிரவாதிகளை இஸ்ரேல் இராணுவம் வேட்டையாடுவதையும் மையமாக வைத்து ஸ்டீபன் ஸ்பீல்பர்க் முயுனிச் என்ற பெயரில் திரைப்படம் எடுத்து 2005 ஆம் ஆண்டு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஏர் பிரான்ஸ் விமான கடத்தல்:

1976 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 27இல் இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ்விலிருந்து பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்த ஏர் பிரான்ஸ் விமானம் ஏதன்ஸ் நகரில் தரை இறங்கிய போது, பாப்புலர் ஃப்ரண்ட் (PFLP) என்ற பாலஸ்தீனிய அமைப்பைச் சேர்ந்தவர்களும், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பும் சேர்ந்து விமானத்தைக் கடத்தினார்கள்.

கடத்தப்பட்ட விமானம் உகாண்டா நாட்டில் உள்ள எண்டபி விமானத் தளத்திற்கு கடத்திச் செல்லப்பட்டது. விமானத்தில் 304 பயணிகள் மற்றும் 12 சிப்பந்திகள் உட்பட 316 பயணம் செய்தனர்.

இஸ்ரேலிய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்ட பாலஸ்தீன தீவிரவாதிகளின் கோரிக்கையாக இஸ்ரேலில் உள்ள 40 தீவிரவாதிகளையும், கென்யா நாட்டில் உள்ள 13 தீவிரவாதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

இஸ்ரேலிலிருந்து எண்டபி நகரம் சுமார் 4000 கி.மீ தொலைவில் இருந்தது. இஸ்ரேல் காரியத்தில் இறங்கியது.

## ஒபரேஷன் தண்டர்போல்ட் - Operation Thunderbolt:

பதிலடியாக இஸ்ரேலில் ஆபரேஷன் தண்டர்போல்ட்க்கு (Operation Thunderbolt) ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஜூலை 3 ஆம் தேதி இரவு, நான்கு கனரக விமானங்கள் (ஹெர்குளிஸ் சி 130) தயாராகின. உருவில் பெரியதாக இருக்கக்கூடிய விமானங்கள். 100 இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் விமானங்களில் ஏறிக்கொண்டனர்.

இராணுவத் தளவாடங்களும், ஆயுதங்களும் ஏற்றப்பட்டன. மருத்தவர்களும், செவிலியர்களும் ஏற்றப்பட்டனர். விமானங்கள் எண்டபிக்கான 4000 கி.மீ பயணத்தை தொடங்கின. கடல் மார்க்கமாகவே விமானங்கள் ஓட்டிச் செல்லப்பட்டன.

நான்கு விமானங்களும் எண்டபி விமான நிலையத்தில் சத்தமில்லாமல் தரை இறங்கின.

விமானத்திலிருந்து இராணுவ பீரங்கிகள் மற்றும் ஜீப்புகளுடன் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் இறங்கினர். திடீர் அதிரடியால் பணயக் கைதிகளை விடுவித்து இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் கூட்டிச் செல்லும் வழியில், தீவிரவாதிகள் எதிர்தாக்குதலில் ஈடுபட்டனர்.

அவர்களுடன் உகாண்டா இராணுவமும் சேர்ந்து கொண்டு, மீட்புக் குழுவினருக்கும், தீவிரவாதிகளுக்கும்/உகாண்டா இராணுவ வீரர்களுக்கும் நடந்த இந்தச் சண்டையில் மேலும் இரண்டு பணயக் கைதிகளும் ஒரு இஸ்ரேலிய தளபதியான யோனாதன் நேத்தன்யாஹூவும் கொல்லப்பட்டனர்.

## பிரதமர் நேத்தன்யாஹூவின் அண்ணன் களப்பலி:

இவர் வேறுயாறும் அல்ல, இன்றைய இஸ்ரேலின் பிரதம மந்திரியான பெஞ்சமின் நேத்தன்யாஹூவின் தமையனார். கடத்தல்காரர்கள் தரப்பில் அனைத்து கடத்தல்காரர்களும் உயிரிழந்தனர். உகாண்டா இராணுவத்தைச் சேர்ந்த 40 வீரர்களும் நடந்த சண்டையில் கொல்லப்பட்டனர். மீட்பு முயற்சி சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது.

ஏனைய பணயக் கைதிகளும், இஸ்ரேலிய இராணுவ வீரர்களும் இஸ்ரேல் நாடு திரும்பினர்.

ஒபரேஷன் தண்டர்போல்ட் வெற்றிகரமான நடவடிக்கை யாவும் 90 Minutes at Entebee என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. இந்தச் சம்பவங்களை வைத்து ஹாலிவுட்டில் பல திரைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில் The Delta Force எனும் படம் குறிப்பிடத்தக்கது

## போர் நிறுத்தம் வாய்ப்பு இல்லை?

ஹமாஸ் உடன் போர் நிறுத்தம் செய்ய வாய்ப்பு இல்லை எனதற்போது இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளஆர். ஹமாஸ் அமைப்பிடம் 199 பேர் பிணை கைதிகளாக உள்ளனர் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையே தொடர்ந்து போர் நடந்து வருகிறது. தற்போது 199 பேர் பிணைய கைதிகள விடுவிக்கும் வரை போரை நிறுத்துவது பற்றியோ, அல்லது படைகளுடைய எண்ணிக்கையை குறைப்பது பற்றியோ எந்த முடிவுக்கும் வர முடியாது என இஸ்ரேல் ராணுவம் தெளிவாக கூறியுள்ளது.

காசா பகுதிகளில் உள்ள நிலத்தடி சுரங்க பகுதிகளில் ஹமாஸ் அமைப்பினர் இவர்களை பிடித்து வைத்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அவர்களை மீட்பதற்காகத்தான் வடக்கு நோக்கி முற்றுகை தொடர்வதாக கூறப்படுகிறது. இஸ்ரேலில் ஏற்கனவே அவசர நிலை பிரகனப்படுத்தப்பட்ட நிலையில், பதட்டமான சூழல் இன்னமும் நிலவிக் கொண்டிருக்கிறது. இந்தப் போரின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்தப் போரால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். தண்ணீர் விநியோகம் தெற்கு காசா பகுதியில் விநியோகிக்கப்பட்டாலும் அங்கு குழாய்கள் உடைக்கப்பட்டதன் காரணமாக மக்களுக்கு போதிய அளவில் கிடைக்கவில்லை என ஐநா தெரிவித்துள்ளது.

இந்தப் போரை நிறுத்த எங்களுக்கு என்ன வழி செய்வது என்று தெரியவில்லை என வெளிப்படையாகவே ஐநாவின் பொது செயலாளர் தெரிவித்துள்ளார். எங்களுக்கு உதவி தேவை, பாதுகாப்பான இடங்கள் பற்றிய தெளிவு தெரியவில்லை. குறிப்பாக மக்களை வெளியேற்றுவதற்கு இஸ்ரேல் தாக்குதல் நடத்தாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆயினும் தற்போது ஹமாஸ் உடன் போர் நிறுத்தம் செய்ய வாய்ப்பு இல்லை என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா



## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 34

# கிராமிய பக்தி இசைப் பாடகர் லிங்கராசா பாக்கியராசா கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

கலைகள் என்ற வகைப்பாட்டினுள் ஆரம்பத்தில் தோற்றம் பெற்றவை கிராமியக் கலைகள் ஆகும். கிராமியக் கலைகளே பிற்காலத்தில் தோற்றம் பெற்ற கலைத்துறைக்கு வித்திட்டன எனக் கூற முடியும். இக் கலைகள் இயற்கையோடு ஒட்டி வாழும் கிராமத்து மக்களின் இயல்பான உணர்ச்சிகளில் இருந்து வெளிப் பட்டவை ஆகும். கால மாறுதலுக்கேற்ப இவ் உலகம் மாற்றமடைந்து சென்றாலும் இக்கலைகள் தனது பண்பினை இழக்காமல் அவ்வண்ணமே இன்னும் ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறான கிராமியக் கலையம்சங்களுள் கிராமிய இசைக் கலையும் ஒன்றாகத் திகழ்கின்றது. இக் கலையுடன் தொடர்புடையவர்களை கோயிற் திருவிழாக்கள், மரபு ரீதியான சடங்குகளின் போது காணக்கூடியதாக உள்ளது.

அவ் வகையில், 1960ஆம் ஆண்டு லிங்கராசா, மூக்கம்மை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் நமது கலைஞர் லி.பாக்கியராசா. தம்பலகாமத்தின் கள்ளி மேட்டை பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்ப பாடசாலைக் கல்வியை தம்பலகாமம் பட்டிமேடு சாரதா வித்தியாலயத்தில் பயின்று விவசாயத்தை ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார். பரம்பரை வழியினூடாக கிராமிய இசைக் கலையில் உதித்த இவர் பாரம்பரிய கிராமிய வழிபாட்டு சடங்கு முறைகளில் குறிப்பாக நவராத்திரி கும்பவிழா, வேள்விச் சடங்கு முறைகள் போன்றவற்றில் கிராமிய இசைப் பாடகராக வலம் வருகின்றார். தனது இனிய குரல் வளத்தால் பக்திப் பாடல் வகைகளை சிறப்பான முறையில் பாடி எம் மண்ணுக்கே அடையாளமான பாரம்பரிய வழிபாட்டு முறை சடங்குகளை அதன் தன்மை மாறாமல் இன்றளவில் வரை இவரால் பேணி பாதுகாத்து வருகின்றமை பதிவுக்குரிய விடயமாகும். தம்பலகாமம் பிரதேசத்தில் கிராமிய இசைத் துறையில் பாடகராக தன் முத்திரையைப் பதித்த மூத்த கலைஞர் லிங்கராசா பாக்கியராசா

சுபீட்சம் நிகழ்நிலைப் பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செல்விகாணல் இங்கு எமது வாசகர்களுக்காக'




**? கிராமியப் பாடல் இசைத்துறையில் ஏற்பட்ட ஆர்வம் குறித்து பகிர்ந்து கொள்வீர்களா?**

பரம்பரை வழி மூலமாகவே வந்த கலையாகும். எனது அப்பா லிங்கராசா பாரம்பரிய கிராமிய இசைப் பாடகர். சிறுவயதிலிருந்தே அப்பாவின் இசைப் பயணத்தில் நானும் இணைந்து சென்று பாடி வருவேன். கிராமிய பக்தி பாடல்களை உடுக்கு இசையுடன் அப்பா பாடி வருவதை செவிவழியாக கேட்டு வந்த ஆர்வமே இக்கலையில் என்னை ஈடுபட வழிவகுத்தது. அப்பாவின் இறப்பிற்கு பின்னர் அவருக்குப் பின் இத் துறையில் 22வருடங்களுக்கு மேலாக இன்று வரையில் உற்சாகத்துடன் பயணித்து வருகின்றேன்.

**? கிராமிய இசைப் பாடகராக எத்தனையாவது வயதில், எச்சந்தர்ப்பத்தில் முதன்முறையாக பாடினீர்கள்?**

2001ஆம் ஆண்டு எனது 41ஆவது வயதில் தம்பலகாமத்தின் கள்ளிமேட்டிலுள்ள சம்மாந்துறையம்பதி முத்து மாரியம்மன் கோவிலின் நவராத்திரி கும்பவிழாவின் போது முதன் முறையாகப் பாடினேன்.



**? எவ்வாறான பக்திப் பாடல் வகைகளை எவ்வாறான சந்தர்ப்பங்களில் இன்று வரையில் பாடி வருகின்றீர்கள்?**

கும்மிப்பாடல், காவியம், சிந்துப் பாடல், அகவல் பாடல்(அழைப்பு பாடல்), அம்மன் தாலாட்டு, குளிர்த்தி பாடல், காவடிப் பாடல், அம்மானை ஊஞ்சற் பாடல், தெய்வமாடல் பாடல், தீப்பாய்தல் பாடல்களென பல வகையிலமைந்த பக்தியோடு சம்மந்தப்பட்ட பாடல்களை மிகப் பிரதானமாக நவராத்திரி கும்பவிழா அதனுடன் இணைந்த ஊர்வலத்திலும், வேள்விகளிலும் தொடர்ந்து பாடி வருவதோடு ஆலயத்தின் விசேட தினப் பூசைகள், வைகாசி விசாகம், பௌர்ணமி தின வழிபாடுகள், நேர்த்திக்கடன் செலுத்தல் விசேட வழிபாடுகள், வீடுகளில் நடாத்தப்படும் குலதெய்வ வழிபாட்டுச் சடங்கு முறைகள் போன்ற சந்தர்ப்பங்களிலும் இன்று வரையில் பாடி வருகிறேன்.

**? உங்களது இசைக் கலையை எவ்வாறான இடங்களில் வெளிப்படுத்தி வருகிறீர்கள்?**

ஆலயங்களே எனது இசைக் கலையினை வெளிப்படுத்தும் இடமாகும். முதன்மையாக நான் பாடி வருவது தம்பலகாமம் கள்ளிமேட்டிலுள்ள சம்மாந்துறையம்பதி முத்து மாரியம்மன் ஆலயமே! இதைத் தவிர, தம்பலகாமத்தின் பட்டிமேடு, பொற்கேணி இடங்களிலுள்ள ஆலயங்களிலும், தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரா ஆலயத்தில் முருகக் கடவுளுக்கு காவடியெடுத்து ஊர் வலம் வரும் இடங்களிலும் பாடி வருகிறேன்.

**? உங்களது கிராமியப் பாடலுக்கு பயன்படுத்தும் பக்கஇசைக் கருவி குறித்து கூறுவீர்களா?**

கிராமிய இசைக்கென்று பல பக்கஇசைக் கருவிகளுள்ளன. அவற்றுள் நான் இன்றளவில் பயன்படுத்தி வரும் தாள இசைக் கருவி உடுக்கு.

**? உங்களது கிராமிய பக்திப் பாடல்களை எங்கிருந்து பாடி வருகிறீர்கள்?**

எனது தந்தை பரம்பரை வழியாக பாதுகாத்து வந்த புத்தகங்களும், கிராமிய வழிபாட்டுச் சடங்கு சார்ந்த ஏனையோரின் பக்திப்பாடல் தொகுப்புகளின் வழியாகவும் பாடல்களைப் பாடி வருகிறேன். தந்தையிடமிருந்து செவிவழியேறல் மூலமாக கேட்டுணர்ந்ததால் அப் பாடல்கள் அனைத்தையும் புத்தகங்கள் பார்க்காமலே பாடி வருகிறேன். பெண் தெய்வங்களுக்குள்ள பாடல்களை மாற்றி ஆண் தெய்வங்களுக்கும் பாடி வருகிறேன். சில சந்தர்ப்பங்களில் தெய்வக் கலையுணர்வால் நானாக பாடிய பாடல் வரிகளுமுண்டு.

**? உங்களுக்குப் பின் இக்கலையில் குடும்பத்தவரின் பங்களிப்பு குறித்து கூறுவீர்களா?**

எனக்குப்பின் எனது மகன் நிஜந்தன் இக் கலையைத் தொடருவார் என்ற முழு நம்பிக்கையும் உள்ளது. இவ் தெய்வீகக் கலையை தனக்குத் தானே உணர்ந்தால் தான் முழு ஈடுபாட்டுடன் செயற்படலாம். அவ்வாறே எனது மகனும் நான் பாடும் போது உடுக்கு இசைப்பார். மகனுக்கு பக்தி பாடல்களை இயற்றும் கலையார்வமும், இறை சிந்தனையும் நிறையவே இருப்பதால் அவர் மூலமாக இக்கலை தொடர்ந்து செல்லும் என்பது உறுதி. அத்துடன் எனது தங்கையின் மகன் (மருமகன்) இத் துறையில் ஆர்வத்துடன் உள்ளார். அவருடைய படிப்பு முடிந்ததும் இக் கலையில் ஈடுபடுவார். மொத்தத்தில் எனது பரம்பரை மூலமாக இக் கலை வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

**? கிராமிய இசை மூலமாக நீங்கள் அடைந்த நன்மை குறித்து கூறுவீர்களா?**

கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பக்கவாதம் ஏற்பட்டு மிகவும் மோஷகரமான நிலையில் இருந்தேன். அந்த நோய் நிலைமையிலிருந்து நான் மீண்டு வருவதற்கு காரணமாய் இருந்தது இவ் இசைக்கலை மூலமான அம்பாளின் ஆசீர்வாதமே என்பேன். தற்போது உடுக்கு இசைப்பதற்கு கைகள் இடம் கொடுக்க கொஞ்சம் கஷ்டமாகவுள்ளது. இதுவும் மாறிவிடும் என்ற தெய்வ நம்பிக்கை நிறையவே உள்ளது.

**? இத் துறையில் கிடைத்த விருதுகள் குறித்து கூறுவீர்களா?**

இத்துறை சார்ந்த பெரிய விருதுகள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. 2018ஆம் ஆண்டு தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கலை, இலக்கியப் பெருவிழாவின் போது கிராமியப் பாடல் துறையில் பாராட்டப் பெற்றமை. சம்பளத்துக்காக செய்வதில்லாமல் கடவுளுக்கு செய்யும் தொண்டாகவே செய்து வருகிறேன். சமுதாயத்தினரால் பாடகராக இன்றுவரை மதிக்கப்பட்டு வருகின்றமையே மிகப்பெரும் விருதாக நான் கருதுகிறேன்.

**? மரபு ரீதியான கிராமிய வழிபாட்டுச் சடங்கில் கிராமப்புறத்திற்கும், நகர்ப்புறத்திற்குமான வழிபாட்டு முறைகளில் உள்ள வித்தியாசம் குறித்துக் கூறுவீர்களா?**

கிராமப்புற மக்களிடையே இருக்கும் பக்திச் செறிவும், வழிபாட்டுச் சடங்கு மீதான மதிப்பும் நகர்ப்புற மக்களிடையே ஒப்பிடுகையில் மிகக் குறைவாகவே உள்ளதென்பது எனது கருத்து.

**? மரபு ரீதியான வழிபாட்டுச் சடங்கு மூலம் சமுதாயம் அடையும் நன்மைகள் குறித்து கூறுவீர்களா?**

நம்பிக்கையின் அடிப்படையில் மக்களால் தொடர்ந்து கடைப்பிடித்துவரும் செயல்களே வழிபாட்டுச் சடங்குகள். இவற்றின் மூலம் நல்லொழுக்கம், மன அமைதி, சமூக ஒற்றுமை, எனப் பல நன்மைகளுண்டு. வாழ்க்கையின் அர்த்தத்தையும், நோக்கத்தையும் கற்பிக்கும் அதே வேளையில், சமூகத்தில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுவதற்கு இவை பெரிதும் உதவுகின்றன.

**? இக்கலையினூடாக உங்களுக்கு ஏதேனும் ஆதங்கம் உள்ளதா?**

ஆம். இக் கலையை இளம் சமுதாயத்தினர் விரும்பி கற்றுக் கொள்ள முன்வரவில்லை என்பதே எனது ஆதங்கம். நம் தமிழர்களின் அடையாளமான இக் கலையில் இளம் சமுதாயத்தினர் ஆர்வம் கொண்டு விரும்பி முன்வர வேண்டும். இக் கலை அதன் தன்மை மாறாமல் யார் மூலமாவது வாழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

**? நிறைவாக, இக்கலையில் ஈடுபட்டு வரும் இளம் சமுதாயத்தினருக்கு மூத்த கலைஞராக நீங்கள் கூற விரும்புவது?**

இக்கலையில் ஈடுபட்டு வருபவர்களுக்கு கலை ரீதியான புதிய தேடல்கள் அதிகம். ஆகவே, எம்முடைய அனுபவத்தில் எமக்கு தெரிந்தவற்றை அவர்களுக்கு கற்றுக் கொடுத்தும், எமக்கு தெரியாதவற்றை அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்வதே ஆரோக்கியமான செயற்பாடாக அமையும். நான் மூத்த கலைஞன் எனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தைக் கொள்ளாமல் இளம் சமுதாயத்தையும் எம்முடன் சரிசமமாகக் கொண்டு ஒருவருக்கு ஒருவர் கலைரீதியான நல்ல விடயங்களை பரிமாறிக் கொள்வதே சிறப்பான அணுகுமுறையாக இருக்கும் என்பது எனது கருத்து.

அந்த வகையில், எம் போன்ற கிராமிய இசைப் பாடகர்களையும் வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

மனிதனும், இறைவனும் இணையும் ஊடகமாக பாரம்பரிய இசை உள்ளது. பாரம்பரிய பக்தி இசை மனதை மகிழ்வித்து ஒருநிலைப்படுத்துகிறது. அந்த இசையையும், அவ் இசைக் கலைஞர்களையும் காத்து அடுத்த தலைமுறையினருக்கும் இவ் இசையைக் கடத்தி பாரம்பரியத்தின் தொடர்ச்சியை நிலைநிறுத்திய செயற்பாட்டை மேற்கொள்ள இளம் தலைமுறையினர் முன்வர வேண்டுமென்பதே எனது கருத்தாகும்.

இவ்வாறாக பாரம்பரிய கிராமிய இசை மூலமாக திருகோணமலைக்கு பெருமையைத் தேடித்தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்திப்பதோடு இக் கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**தொடரும்.......**

**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**





# ஒரு மனிதனின் எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும் முதலாம் நிலை கல்வி

ஒன்று தொடக்கம் 5 வகையான வகுப்புகளை கொண்ட அமைந்த கல்வி நிலையாகக் காணப்படும் அதேவேளை, இக் கல்வி நிலையானது 1920 ஆம் ஆண்டில் முதல் இலக்க கட்டளை சட்டத்தின் கீழ் ஆரம்பக் கல்வி தொடர்பான ஒழுங்குவிதியின் கீழ் உட்பட்டவாறு உருவாக்கப்பட்டுள்ளது. 1929 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீள வாய்ப்பட்ட விதி கோவையின் முதல் நிலை வகுப்பாக ஐந்தாம் தரத்தினை முடிவெல்லையாகக் கருதி இக் கல்வி நிலையானது தீர்மானிக்கப்பட்டது. இலங்கை பாடசாலைக்கு அமைய கல்வித் திட்டதிணைக்களத்தினால் கல்வி பாடத் தொகுதி முறைத் திட்டம் மூலமாக வெளியிடப்பட்டன.

ஆரம்பக்கல்வி தன்னார்வமானது மற்றும் முற்றிலும் தனிப்பட்ட ரீதியிலே செயற்படுத்தப்படுகின்றது. பெரும்பாலான பாடசாலைகள் நகர்ப்புறங்களில் உள்ளன. ஆரம்பக் கல்வியில் ஒன்று முதல் ஐந்து வகையான வகுப்புகள் அடங்கப்பட்ட நிலையில் கல்வியானது இலவசமாகவும் கற்பிக்கப்படுகின்றது. ஆனால், பாரம்பரியத்தின் படி 1999 ஆம் ஆண்டு வரை இலங்கை அரசாங்கம் ஒரு சீர் திருத்த திட்டத்தின் ஒரு பகுதியாக ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கும் புதிய விதிமுறைகளை ஸ்தாபிக்கும் வரை கட்டாயமாக இருக்கவில்லை. ஐந்து முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகளின் 14 சதவீதம் பேர் பாடசாலைக்கு சமூகமளிப்பதில்லை. பாடசாலை வருகையை உயர்த்திக் கண்காணிக்கும் அதிகாரத்துடன் கிராமக் குழுக்களுக்கு இப்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி கற்பதற்கு வருகையை ஊக்குவிக்கும் முகமாக மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் 90 சதவீதமான பாடசாலைகள் கல்வி கற்ற பிள்ளைகள் ஆரம்பக் கல்வியில் பயில்வதாக சமீபத்திய புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தொடக்கக் கல்வியின் முதல் மூன்று ஆண்டுகளுக்கான பாடத்திட்டம் மதம், தாய் மொழி, ஆங்கிலம் மற்றும் எண்ணிக்கைகளாக அடங்குகின்றன. தரம் நான்கிலே அதே பாடங்கள் தொடரப்பட்ட நிலையில் உடற்கல்வி ஆக்கப்பூர்வமான செயற்பாடுகள் ஒரு பயனுள்ள பங்கினை ஊக்குவிப்பதாகும். எனவே, 2003 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கல்வியினுடைய இலக்குகளில் காணப்படும் தேர்ச்சிகளது முதலாம் நிலைக் கல்வியின் உடைய முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான முதலாம் நிலைக் கல்வியானது எதிர் கொள்கின்ற சவால்களாக, வளப் பற்றாக்குறை, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடைய பற்றாக்குறை, பிள்ளைகளுடைய வரவின்மை, முன்பள்ளி ஆசிரியர்களுடைய பற்றாக்குறை, சமனற்ற பரம்பல், போசாக்கின்மை மற்றும் குடும்ப சூழல் பரீட்சைகளை மாத்திரம் மையமாகக் கொண்ட கற்றல், இடைவிலகல், நிதி ஒதுக்கீடு இன்மை போன்ற பல்வேறுபட்ட சவால்களை அன்று தொடக்கம் இன்று வரை உள்ள முதலாம் நிலைக் கல்வியானது எதிர்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் பெரும்பான்மையான கல்வியாக, எழுத்து கல்வி முறையே இன்றும் காணப்படுகின்றது. தன்னார்ந்த ரீதியில் அவர்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்துமாறு காணப்படும் கல்வியானது தற்போதைய காலகட்டங்களில் பார்ப்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஒன்று தொடக்கம் 5 வரையான ஆரம்ப பாடசாலையானது ஐந்தாம் தரத்தில் நடைபெறுகின்ற புலமைப் பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டது. பரீட்சைக்காகவே தரம் 3,4,5 இல் உள்ள மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்கொண்டே அவர்களுக்கு கல்வியானது புகட்டப்படுகின்றது.

எனவே, அத் தரங்களில் காணப்படுகின்ற மாணவர்களுக்கு இயற்கையான முறையில் அமையப்பெறும் கல்வியானது கிடைப்பதாகத் தெரியவில்லை.

இன்னும் மேலும் திறன்களை வளர்க்கவும், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தம்மை ஊக்குவிக்கவும் முயற்சி செய்யும் பொழுது பரீட்சைகளும் போட்டி சூழலும் இடையூறாகின்றது. எமது கல்வி முறையானது துறை ரீதியாக ஒழுங்கமைக்கப்படாததே இதற்குக் காரணமாகும். எண்ணறிவு, எழுத்தறிவு வளர்க்கப்படுவது ஆரம்பக் கல்வியினுடைய முக்கிய பங்கு. ஆனால், பிள்ளையின் எதிர்காலத்துக்கு சிறந்தது எது என்பது தொடர்பான அடிப்படை ஊக்கப்படுத்தல் கூட அங்கு இல்லை. எமது நாட்டினைப் பொறுத்தமட்டில் பரீட்சையை மையமாகக் கொண்டு காணப்படும் கல்வி முறையானது இன்றுவரையிலும் அழியாத ஒன்றாகும். மேலும், உளரீதியாக மாணவர்களுடைய தாக்கமானது ஐந்தாம் தர புலமைப் பரிசில் ஊடாக விதைக்கப்படுவதனால் சிறு வயதில் அவர்களிடையே உள்ள இயற்கையாக வெளிப்படுத்தப்படுகின்ற ஆற்றல்களும் திறன்களும் முடங்கிக் கிடக்கின்றன.

மேலும் இயற்கையான திறன்களை வெளிப்படுத்துகின்ற விதமாக இலங்கையில் அனுராதபுரத்தில் அழகப்பெருமானை பகுதியில் பிறந்த ஒன்றரை வயது பெண் குழந்தை ஒன்று உலக சாதனை படைத்துள்ளது. இப் பெண் பிள்ளையானது ஏழு நிமிடம் மற்றும் 6 வினாடிகளில் அதிக எண்ணிக்கையிலான பறவைகளை அடையாளம் கண்டு உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

அதுமாத்திரமன்றி, இந்தியாவில் குழந்தை ஆரோகி, ஒன்றரை வயதில் அதிகபட்சமான படங்களை அடையாளம் கண்டு, அதனுடைய பெயர்களையும் கூறி, படங்களுடைய சிறப்பம்சங்களையும் எடுத்துரைத்துள்ளது. எனவே, குழந்தையும் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. அது மட்டுமல்லாது தேஜஸ் எனப்படும் மூன்று வயது ஆண் பிள்ளை 80 நாடுகளுடைய கொடி மற்றும் அந்நாடுகளினுடைய பெயர்கள் என்பவற்றைக் கூறி, இந்தியாவில் சேலம் பகுதியில் கலாம் வேர்ல்ட் சாதனை படைத்துள்ளது. இவற்றை நான் கூற முற்பட்டதன் விளைவு இப் பிள்ளைகள் சிறு வயதிலிருந்து அவர்களுடைய தன்னார்வத் திறன்களை வெளிப்படுத்தியுள்ளது. எனவே, அவர்கள் வளர்ந்து முதலாம் நிலை கல்வியினை தொடருகின்ற பட்சத்தில் அவர்களுடைய திறன்கள் மேலும் மெருகேற்றப்பட வேண்டுமே தவிர, அத் திறன்களை அடக்கி வெறுமனே புத்தகப் படிப்பை மாத்திரம் ஊட்டுவது சிறப்பானதோர் காரியமா? என



நீங்களே கூற வேண்டும். எனவே, இவ்வாறான சிக்கல்களே இலங்கையின் முதலாம் நிலைக் கல்வியின் தற்கால சூழ்நிலை.

மேலும் சிங்கப்பூர், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளுடைய முதலாம் நிலை கல்வித் திட்டத்தினை எடுத்து நோக்கும் பொழுது, அக் கல்வித் திட்டங்கள் அனைத்தும் வெறுமனே புத்தகப் படிப்பு அல்ல. அதற்குப் பதிலாக அவர்களுடைய உள்ளார்ந்த திறன்களை வெளிப்படுத்து முகமாக பல்வேறுபட்ட பாடத்திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. உதாரணமாக நீச்சல், விளையாட்டுக்கள், உற்பத்திப் பொருட்களின் விற்பனைகள், சந்தைப் படுத்தல் போன்ற பல்வேறு பட்ட திறன்களை விருத்தி செய்யும் முகமாகவே அவர்களுடைய கல்வி நடவடிக்கையானது காணப்படுகின்றது. அது மாத்திரமல்லாது, அது 7 வயதிற்கு பிற்பட்ட காலப்பகுதியிலே முதலாம் நிலை கல்வியானது போதிக்கப்படுகின்றது. ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் வெறுமனே புத்தகப் கல்வியானது கிணற்றுத் தவளை போல் எனப்படுகின்ற வாசகத்துக்கு ஒப்பாக காணப்படுகின்றது.

அது மாத்திரமில்லாது, ஆசிரியர்களுடைய பற்றாக்குறை மேலும் விரித்துக் கூறுவோமாயின் பயிற்றப்பட்ட ஒழுங்கான நெறிமுறைக்கு உட்பட்ட கற்றறிந்த ஆசிரியர்களுடைய பற்றாக்குறை. குறிப்பாக நோக்குமிடத்தில் கிராமப் பகுதிகளில் காணப்படுகின்ற முதலாம் நிலைக் கல்வி தனிப்பட்ட ரீதியில் போதிக்கப்படுகின்ற அதாவது இடைநிலைக் கல்வியோடு இணைப்பில் அல்லாத தன்னார்ந்த ரீதியில் காணப்படுகின்ற பாடசாலைகளில் குறிப்பாக ஒன்று தொடக்கம் 5 வகையான தரங்கள் மாத்திரம் காணப்படும் பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவி வருவது மிகவும் வருத்தத்துக்குரியது. அப்பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் மூன்று தரங்களுக்கு வகுப்பாசிரியர்களாக செயற்பட்டு வருகின்ற அளவிற்கு பற்றாக்குறை. மேலும் ஒழுங்காக நெறிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. தற்கால இலங்கையில் காணப்படும் கிராமப் பகுதிகளில் காணப்படும் முதலாம் நிலைக் கல்வி. இச் சவால்களையும் எதிர்கொள்கின்றது.

அடுத்த கட்டமாக பேசப்படுவது, வளங்களுடைய சமனற்ற பரம்பல் அதாவது பாடசாலை அன்று தன்னார்ந்த ரீதியில் இயங்கப்பட வேண்டுமெனில், அதற்கு வளங்கள் என்பது முக்கியமான ஒன்று. முற்கால கட்டத்தில் இருந்து தற்காலம் வரை வளங்களினுடைய பற்றாக்குறையானது பேசப்படும் ஒரு பொருளாக மாறி வருகின்றது. பெரிதும் கூறப்போனால் கிராமப்புற பாடசாலைகளை இவ்வாக்கியத்தின் பேசு பொருள் பிள்ளைகள் கற்கக்கூடிய மேசை, கதிரைகளாகட்டும் மேலும் அவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய விளையாட்டுப் பொருட்களாகட்டும் கட்டட வசதிகளாகட்டும் என பல்வேறுபட்ட வளங்களினுடைய தட்டுப்பாடானது தற்கால முதலாம் நிலைக் கல்வியை எதிர்கொள்கின்ற மாணவர்களுக்கு ஒரு பாரிய நெருக்கடிக்கு உண்டான சவால்கள் எனலாம். இச் சவால்கள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்படப் போகின்றது என கேட்டால் அதற்கு கேள்விக்குறியே விடையாக காணப்படும். ஏனெனில், கூடியளவு அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கையானது கல்வியினுடைய அபிவிருத்தியில் இப்படிப்பட்ட பல்வேறுபட்ட சிக்கலுக்கு உண்டான கிராமப்புறப் பாடசாலைகளை எதிர்கொண்டு சிக்கல்களை நிவர்த்தி செய்வார்களாயின் எதிர்காலத்தில் முதலாம் நிலைக் கல்வி சவால் எனக் கூறக்கூடிய வளப்பற்றாக்குறை இல்லாதொழியும்.

இவ்வாறு சவால்களை அடுக்கி கொண்டு செல்கின்ற வேளையில் போசாக்கின்மை மற்றும் குடும்ப சூழல் சவாலானது மிகவும் முக்கியமானது.

ஒன்று காலையில் எழுந்து மாணவன் ஒருவன் பாடசாலைக்கு வருகின்ற பொழுது அவன் காலை உணவானது உட்கொள்ளாமல் பாடசாலைக்கு சமூக மளிப்பானானால் அவனால் காலை பிரார்த்தனையில் கூட முழுமையாக பங்கு பெற்ற முடியாது. அதனை அடுத்து பாடத்தில் முழுமையான கவனத்தினைச் செலுத்த முடியாது. ஒரு பதகளிப்பு பின் தங்கள் நடத்தையில் மாற்றம் என்பன அவன் மேல் ஏற்படுத்தக் கூடும். மேலும் ஒரு பாட வேளையின் பிற்பாடு முதலாம் நிலைக் கல்வி போதிக்கப்படும் பாடசாலைகளில் போசாக்கு உணவு வழங்கப்படுகின்றது. எனவே, இவ்வாறான செயற்பாடு சவாலை கூடிய அளவு தாக்கத்தை ஏற்படுத்தாது.

கல்வியினுடைய சமனற்ற பரம்பலானது முதலாம் நிலைக் கல்வியினுடைய அடுத்த சவாலாகக் காணப்படுகின்றது. அதாவது மாணவர்களின் வாழ்க்கை முதல் படி எனத் தொடங்குகின்ற முதலாம் நிலைக் கல்வியினுடைய செயற்பாடுகள் நகரப்புறம் கிராமப்புறம் என இருவகையாக எம்மால் நோக்க முடியும். நகர்ப்புறப் பாடசாலைகளில் ஒரு சிறப்பான கல்வியினை அதாவது குடும்ப சூழல், குடும்பப் பின்னணி, பெற்றோரின் பங்களிப்பு, மாணவர்களின் ஆற்றல்கள் மற்றும் திறமைகள், இணைப்பாட விதான செயற்பாடுகள், மாணவர்களுடைய பங்காற்றல் என பல்வேறு பட்ட விடயங்கள் நகர்ப்புறங்களில் உயர் நிலையைக் கொண்டிருக்க அதே கல்வியானது கிராமப்புறங்களில் வழங்கப்படுகின்ற பொழுது பெற்றோர்களுடைய பங்களிப்பு குறைவாகவும், பிள்ளைகளுடைய குடும்ப சூழலானது பின் தங்கிய நிலைகளிலும் ( காலை உணவு இன்மை, தாய் தந்தையர்களுக்கு இடையே முரண்பாடு ) பிள்ளைகளுடைய ஆர்வமின்மை, பெற்றோர்களுடைய கவலையீனம் போன்ற பல்வேறுப்பட்ட காரணங்கள் கிராமப்புற பாடசாலையைச் சூழ்ந்திருக்கின்றன.

எனவே, இவ்வாறான ஒரு சமனற்ற பாங்கானது முதலாம் நிலைக் கல்வியினுடைய பாரிய பிரச்சினைகளில் ஒன்று.

அது மாத்திரமன்றி, நகர்ப்புறங்களில் கூடுதலாக முதலாம் நிலைக் கல்வியினை தொடர்வதற்கு முன்னர் மாணவர்களை பிரத்தியேக ரீதியிலான கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவர். முக்கியமாக ஆங்கிலக் கல்வி மற்றும் கணிதப் புலமை மேலும் எழுத்துப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு நகரப்புறங்களில் மேலும் பணம் படைத்தவர்கள் இச்செயற்பாட்டில் மாணவர்களை உள்ளீர்க்கின்றனர். ஆனால், மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதியில் இருக்கின்ற மாணவர்களும் மேலும் வசதி வாய்ப்பற்ற குடும்பங்களுடைய மாணவர்களும் நேரடியான கல்வியை முன் பள்ளியைத் தொடர்ந்து முதலாம் நிலைக் கல்விக்கு உள்ளீர்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு சரியான வாசிப்புப் பயிற்சியினை அல்லது எழுத்துப் பயிற்சியினை ஆசிரியர்களானவர்கள் சிறப்பான ஒரு நோக்கு கையில் வழிநடத்த வேண்டும். பல்வேறுபட்ட எனது பார்வைக்கு உட்பட்ட பாரிய பாடசாலைகளில் சில மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். அதாவது முதலாம் தரத்தினைத் தொடர்ந்து சரியான ஒரு முன்னேற்றம் இல்லாத இரண்டாம் வகுப்புக்கு ஏற்றப்படுகின்றனர். அதிலும் மாணவர்கள் சரியான ஓர் ஊக்கப்படுத்தல் இன்றி, வழி நடத்தல்கள் இன்றி மூன்றாம் வகுப்பிற்கும் இறுதியாக புலமைப் பரிசில் பரீட்சைகளை எதிர்கொள்கின்றனர். அவ்வாறான பின் தங்கிய நிலையில் காணப்படுகின்ற மாணவர்கள் தொடர்ச்சியாக பின்தங்கிய இடத்திலே இருக்கின்றனர். இதற்கு யார் காரணம்? என்பதை எம்மால் கூற இயலாது. ஆசிரியர்களோ? அல்லது மாணவர்களுடைய செயற்பாட்டுத் தன்மையில் ஏற்படும் குறைவோ? என்பது வினாவிற்கு உரியதாகும்.

ஆகவே, முதலாம் நிலைக் கல்வியினுடைய சவால்களையும் சூழ்ந்து இருக்கின்ற பிரச்சினைகளையும் இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்கின்ற நிலையில், ஓர் அடித்தளத்தில் பாரியதொரு குறைபாடுகள் காணப்படுமாயின், அந்த அடித்தளத்தின் மேலே திட்டமிட்டுள்ள வீடாக இருந்தாலும் சரி, ஒரு கட்டிடமாக இருந்தாலும் சரி, ஓர் உயர் நிறுவனத்தின் உடைய ஸ்தாபனமாக இருந்தாலும் சரி அதன் மேல் ஒரு செங்கல் கூட வைக்க முடியாது. ஆகவே, அடித்தளத்தை மீண்டும் மீண்டும் சீரமைக்க வேண்டும்.

எனவே, ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா எனப்படுகின்ற பழமொழிக்கிணங்க ஒரு கட்டடத்தினுடைய அடித்தளமானது ஒழுங்காக கட்டப்படாத இடத்தில் அதற்கு மேல் எந்த ஒரு கட்டுமாணப் பணியையும் எம்மால் ஈடுபடுத்த முடியாது. ஆகையினால், ஒருவனது எதிர்காலத்துக்கு உந்து சக்தியாக காணப்படும் முதலாம் நிலைக் கல்வியினுடைய சிறப்பு இதிலிருந்து எமக்கு மெய்ப்படுகின்றது.

எனவே தான், வளர்முக நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வின்படி உயர்கல்வி, இடைநிலைக் கல்வி விளைவு வீதம் 15 வீதம் தொடக்கம் 17 வீதமாகவும் ஆரம்பக் கல்வியின் விளைவு வீதம் 27% ஆகவும் காணப்படுகின்றதனால் பிற கல்வி நிலைகளை விட ஆரம்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. தனியாளும் சமூகமும் கல்வியினால் அடைந்த நன்மைகளை தொகை ரீதியாக எடுத்துக் கூறுவது கல்வியின் விளைவு வீதமாகும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கு இணங்க ஆரம்பக் கல்வியின் அத்திவாரம் முறையாக இடம்பெற்றால் மாத்திரமே பிள்ளையினுடைய எதிர்காலத்துக்கு வழிவகுத்து விட முடியும். என்பதனை மனதில் கொண்டு பிள்ளையின் உடல் உளநிலையை ஏற்றாற் போல ஆரம்பக் கல்வி வழங்கப்படுதல் வேண்டும்.

**விதுர்சா மாணிக்கதேவன்,**

**2ஆம் வருடம் முதலாம் அரையாண்டு,**
**கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,**
**கல்வி, பிள்ளை நலத்துறை,**
**கலைகலாசார பீடம், கிழக்குப்**
**பல்கலைக்கழகம், இலங்கை.**

# கதிரவேளி பால்சேனை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு இணைந்த கரங்களினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு






(நூருல் ஹுதா உமர்)

கல்குடா கல்வி வலய கதிரவெளி கගු/பால்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் அதிகஷ்ட குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை வழங்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் நா. தயாகரன் தலைமையில் இன்று இடம்பெற்றது.

ஏழை மாணவர்களின் கல்விக்கு தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டி வரும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ. கஜரூபன், சி.காந்தன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு 5000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பனவற்றை வழங்கி வைத்தனர்.

இணைந்த கரங்கள் அமைப்பு கல்விற்கான சேவையை ஆரம்பித்து ஒரு வருட காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கி அவர்களின் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்க உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் நிருவாக சபை கூட்டம்!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் நிருவாக சபை கூட்டம் கடந்த 28.10.2023 திகதி இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஒக்டோபர் மாதத்திற்கான நிருவாக சபைக் கூட்டம் சங்கத்தின் தலைவர் பாவலர் சாந்தி முஹைதின் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சங்கத்தின் செயலாளர், உபதலைவர் உள்ளிட்ட நிருவாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டதுடன், சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டு, இக்கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொழில் முனைவோர் சங்கத்திற்கு ஆறு இலட்சம் நிதி உதவி




(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் இயங்கி வரும் தொழில்முனைவோர் சங்கத்திற்கு ஆறு இலட்சம் ரூபா நிதி கையளிக்கப்பட்டது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க பாலம்போட்டாறு பெண்கள் தொழில் முனைவோர் சங்கத்திற்கு திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால்(வன்னிகோப் அவுஸ்ரேலியா ,காந்தி சேவை மன்றம் நியூசிலாந்து ஆகியோரின் நிதிப் பங்களிப்பில்) ரூபாய் 600000.00 நன்கொடையாக (28) பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.இதன் மூலமாக தங்களது தொழிலை விருத்தி செய்ய சங்க உறுப்பினர்களுக்கு வட்டியற்ற கடன் மூலமாக இதன் மூலம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இதில் கணக்காளர் செல்வதாஸ்,நிருவாக உத்தியோகத்தர் உடகெதர மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பங்குபற்றுதலுடன் காசோலை மக்கள் சேவை மன்ற உத்தியோகத்தர் .பிரகலாதனால் சங்கத்தினருக்கு வழங்கிவைக்கப்பட்டது.

# மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/92 அணியின் ஐந்தாவது ஒன்றுகூடல் திருமலையில்!!



( காரைதீவு சகா)

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91 92 அணியினரின் ஐந்தாவது ஒன்று கூடல் கடந்த சனி(28) ஞாயிறு(29) தினங்களில் திருமலையில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மலையகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த புலன அணி ஆசிரியர்கள் இந்த ஒன்று கூடலிலும் சுற்றுலாவிலும் கலந்து கொண்டார்கள் .

திருகோணமலை கிரிஜா இல்லத்தில் ஐந்தாவது ஒன்றுகூடல் புலன அணியின் தலைவர் வீ.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

அனைவரும் தனது கருத்துக்களை தெரிவித்து அடுத்த பயணம் மலையகத்திற்கு அமைய வேண்டும் என்ற கோரிக்கையும் விடுத்தார்கள்.

இந்த ஒன்று கூடல் மற்றும் சுற்றுலாவிற்கு புலன நண்பிகளான ஜெர்மனியில் இருந்து விஜயகலா ,லண்டனில் இருந்து ராஜமாலினி ஆகியோரின் அனுசரணையும் கிடைக்கப்பெற்றது.

இதன் போது திருகோணமலை கோணேசர் ஆலயம், பத்திரகாளியம்மன் ஆலயம், லட்சுமி நாராயணன் ஆலயம், மற்றும் கன்னியா வெந்நீரூற்று ஆகிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் விஜயம் செய்தார்கள்.

திருகோணமலை புலன உறவுகளான சசிகலா இந்திராணி நளினி கிரிஜா மகாலட்சுமி குமுதினி மற்றும் சண்முகநாயகம் ஆகியோர் இதற்கான விரிவான ஏற்பாடுகளையும் பயணத்தின் போதான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சௌமியமூர்த்தி தொண்டமானின் 24 ஆவது சிரார்த்த தினம்





தலவாக்கலை பி.கேதீஸ்

மலையகத்தின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 24ஆவது சிரார்த்த தினமான நேற்று (30.10.2023) பாராளுமன்ற கட்டட தொகுதியில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வின் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

# மன்னாரில் கட்டுக்கரைக்குளத்தில் நீர் இன்மையால் நெற்செய்கை விதைப்பு பின்தள்ளப்பட்டுள்ளது





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் கட்டு;டுக்கரைக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் 2023 - 2024 ம் ஆண்டு காலபோக நெற;செய்கையானது கட்டுக்கரை குளத்தில் நீர் இன்மையால் காலம் தாழ்த்தியே நெற் செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதான குளமாக விளங்கும் கட்டுக்கரைக் குளத்திட்டத்தின் கீழான பெரும்போக பயிர்ச் செய்கைக் குழுக்கூட்டம் வெள்ளிக்கிழமை (27) உயிலங்குளத்தில் மன்னார் மேலதிக மாவட்டச் செயலாளர் ய.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்டுக்கரைக்குளத்தின் கீழான 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான பெரும்போக பயிர்ச் செய்கை முன்னோடிக் கூட்டறிக்கை வாசிக்கப்பட்டது.

விவசாயம் செய்யக்கூடிய இடம் விஸ்தீரணம் மற்றும் நீரின் கொள்வனவு பற்றி ஆராயப்பட்டது.

இக் குளத்தின் கிழு; தெரிந்தெடுக்கப்;பட வேண்டிய வாய்க்கால்கள் அவற்றின் விஸ்தீரணம்

பயிர்ச் செய்கையின் அட்டவணை , விதைநெல் , பசளை விநியோகம் , அடாத்துப் பயிர்செய்கை , கால்நடை கட்டுப்பாடு , காப்புறுதி மற்றும் வங்கி கடன் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி வாய்க்கால் துப்பரவு மற்றும் பராமரித்தல் இறுதி திகதி 05.11.2023

முதல் நீர் விநியோகம் 10.11.2023 , இரண்டரை மற்றும் மூன்றரை மாத நெல் இனமே விதைக்க வேண்டும்.

இதன் இறுதி விதைப்பு 30.11.2023 , கால்நடைகளை கட்டும் இறுதி திகதி 30.10.2023 காப்புறுதி செய்ய வேண்டிய இறுதி திகதி 30.11.2023. முதல் தண்ணீர் விநியோகம் 01.12.2023. இறுதித் தண்ணீர் விநியோகம் 28.02.2024

அறுவடை ஆரம்பத் திகதி 15.03.2024 அறுவடை இறுதி திகதி 15.04.2024 கால்நடைகளை அவிழக்கும் திகதி 22.04.2024 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள்

(க.ருத்திரன்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை வாழைச்சேனை சேகரம், ஹனியல் சிறுவர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாணவர்கள்,இளைஞர், யுவதிகளின் எதிர்கால கல்வி மற்றும் வாழ்வதாரத்தை மேம்படுத்தும் முகமான பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் வாழைச்சேனை திருச்சபை வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் முதன் நிகழ்வாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலைகளுக்கு சென்று கல்வியை கற்பதற்காக துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேசத்தில் கல்வி கற்றுவிட்டு தொழிவாய்ப்பின்றி இருக்கும் யுவதிகளின் நலன் கருதி ‘எம்.சி.தையலகம்’ வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் பாரம்பரிய உணவினை நாடுவோரின் நன்மை கருதி சிறுவர் திட்ட ‘தெ போரா ’ பாரம்பரிய உணவகத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நடைபெற்றது.

இலங்கை மெதடிஸ்த திருட்சபை வாழைச்சேனை சேகரத்தின் முகாமைக் குரு அருட்கலாநிதி கே.எஸ்.நிசாந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை மெதடிஸ்த திருச்சபை திருப்பேரவை தலைவர் எபனேசர் ஜோசப் மற்றும் சிறப்பு அதிதிகளாக திட்ட ஊக்குவிப்பாளர் விலி செயான்,கிராம சேவகர் கா.ஜெகதீஸ்வரன்,அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் வி.திரேசா, நூலகர் பொறுப்பாளர் அருமைநாயகம் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க பொருளாலர் தே.தேவகுமார் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

